




**Nallathapudi Nallapudi**
**(TAMIL)**

**Hold on to the Good**

**By**
**Iskandar Jadeed**

All rights Strictly reserved. No Part of this publication may be transtated or transmitted on any form or by any means electronic or mechanical, including photocopy. recording or any information storage and retrieval system without permission in writing from the publisher.

பொருளடக்கம்

1. எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்

2. சுவிசேஷத்திலும் குரானிலும் சிலுவை

3. யுத்தத்தைத் உருவாக்கும் கிளர்ச்சிக்காரர்கள்

4. பாவம்

5. புத்தரும் கிறிஸ்துவும்

6. கிறிஸ்துவின் தெய்வீக குமாரத்துவம்

7. செய்திகளின் சாராம்சம்

8. திறனாய்வுக் கேள்விகள்



# எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து

## நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்

சோதித்துப் பார்க்கும்படி அழைக்கும் இவ்வசனம் 'நல்ல வழி' யின் கருத்தாகும். தேவனுடைய வசனம் கூறுகிறது. 'இந்த வார்த்தையின்படியே சொல்லாவட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை. (ஏசா 8:20)

**அன்பு நண்பரே,**

உங்கள் செய்தியின் துவக்கத்தில் நீங்கள் கூறினீர்கள், 'இதுவே என் பாதை, நான் அல்லாஹ்வை நிச்சயமான அறிவுடன் கூப்பிடுகிறேன், நானும், என்னைப் பின்பற்றும் எவரும் அப்படியே செய்கிறோம்' (ஸூரா 12:108) இதன் மூலம் நீர் ஒரு கொள்கையுள்ள மனிதன் என்றும் 'மேன்மையான வழியில் இருந்தாலொழிய வேதநூலின் மக்களோடு தர்க்கம் செய்யாதீர்கள் 'ஸூரா 29:46) என்னும் குரானின் கூற்றை கடைபிடிப்பவர் என்று எண்ணினேன்.

ஆனால் நீர் குறிப்பிட்டிருந்த கவிதையைப் படித்தபோது ஏமாற்றமடைந்தேன். 'கிறிஸ்தவர்களிடைய இயேசு' எவ்வளவு ஆச்சரியப்படத்தக்கவராக இருக்கிறார்' என்றும் உம்முடைய கூற்று, நாங்கள் சிந்தித்த அநேக முஸ்லிம்கள் உறுதியாக எதிரொலுப்பதும்' அவர்கள் அவரைக் கொல்லவோ, சிலுவையிலறையவோ இல்லை, ஆனால் அது அப்படி அவர்களுக்குத் தோன்றியது' (ஸூரா 4:157) என்ற குரானின் வசனத்துக்கு ஒத்ததுமாக இருந்தது.

பொறுமையும் புரிந்துகொள்ளுதலும் உடையதும், சத்தியவேட்கையிலே மெய்க்கிறிஸ்தவன் கடைபிடிப்பதுமான அன்பின் ஆவியிலே பின்வருபவற்றை நான் உங்களுக்கு முன் வைக்கிறேன்.

## சுவிசேஷத்திலும் குரானிலும் சிலுவை

சிலுவை கிறிஸ்தவ மார்க்கத்தின் ஆற்றல் மிகுந்த அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு எழுதின தமது முதல் நிருபத்தில் எழுதுகிறார். 'யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடு கிறார்கள். நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும், கிரேக்கருக்கப் பைத்தியமாயும் இருக்கிறார். ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப் பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார். (1 கொரி 1:22-24) அவர் மேலும் எழுதுகிறார் 'சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப்பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத் தோடாவது அறிவிக்கிற வனாக வரவில்லை. இயேசு கிறிஸ்துவை, சிறுவையில் அறையப் பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன். (1 கொரி 2:1,2) இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் கிறிஸ்துவின் இருந்தவர் களும், அவரை பிதாவானவரின் ஒரே பேரான குமாரனா கவும், கிருபையும் சத்தியமும் நிறைந்தவராகவும் அறிந்து, அவருடைய பரிபூரணத்திலிருந்து கிருபையின் மேல் கிருபை பெற்றவர்களுமான அவருடைய அப்போஸ்தலரின் சாட்சியைக் கருத்தில் கொள்ளும் போது, கிறிஸ்தவ மார்க்கம் உதயமானபோது அவர்கள் பிரசங்கித்ததும் மக்கள் தங்கள்பால் ஏற்றுக்கொண்டு அதன் மூலம் இரட்சிக்கப்பட்டதுமான சுவிசேஷம் பவுல் பின்வரும் வார்த்தைகளில் சரியாகச் சாராம்சப்படுத்தும் அதே நற்செய்தியேயாகும். "அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும்



உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்ன வென்றால், கிறிஸ்துவானவர் வேதாவாக்கியங்களின்படி, நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து"... (1 கொரி 15:1-4)

இன்னொரு அப்போஸ்தலனாகிய யோவான் கூறுகிறார், "அந்த ஜீவன் வெளிப்பட்டது பிதாவினிடத்திலிருந் ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்து சாட்சி கொடுத்து அதை உங்களுக்கு அறிவிக்கிறோம். நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம் (1 யோ 1:2,3) 'அந்த வார்த்தை மாம்சமாகி....... நமக்குள்ளே வாசம்பண்ணினார் '(யோ 1:14) என்னும் சுவிசேஷத்தின் வார்த்தைகளுடன் இது ஒத்துப்போகிறது.

இன்னும், வேறொரு அப்போஸ்தலனாகிய பேதுரு யூதருக்குக் கூறுகிறார். 'இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள் ; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக் குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய

கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள் (அப் 2:22-23).

## தீர்க்கதரிசிகளுடைய சாட்சி

கிறிஸ்துவின் சிலுவை மரணத்துடன் சம்பந்தப்பட்ட சம்பவங்களைப் பற்றிய அநேக தீர்க்கதரிசனங்கள் தீர்க்கதரிசிகளின் புத்தகங்களிலே காணக்கிடக்கின்றன. இத்தீர்க்கதரிசனங்கள் யாவும் நிறைவேறியுள்ளன.

- இயேசு முப்பது வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டார் அந்தப் பணத்தைக் கொண்டு குயவனுடைய நிலம் வாங்கப்பட்டது. (சகரியா 11:13)
- அவர் கைகளும், கால்களும் ஆணிகளால் சிலுவையில் அறையப்பட்டன. (சங்கீதம் 22:16, 17)
- அவர் மிகவும் அதிகமாகக் காயப்பட்டார் (ஏசா 53:5)
- அவர் கடுமையாக வாரினாலடிக்கப்பட்டார் (சங் 129:3)
- அவர் அமைதியாகப் பாடுபட்டார் (ஏசா 53:7)
- அவர்கள் அவரை அடித்து அவருடைய முகத்திலே துப்பினார்கள் (ஏசா 53;3,4,8)
- அவர் பரியாசம் பண்ணப்பட்டார் (சங் 22:6-8)
- பிதாவானவர் அவரைக் கைவிட்டார் (சங் 22:1)
- அவருக்குக் குடிக்க காடி தரப்பட்டது (சங் 69:21)
- அவருடைய வஸ்திரங்களுக்காக போர்வீரர்கள் சீட்டுப்போட்டனர் (சங் 22:18)
- அவருடைய விலாவிலே ஈட்டியால் குத்தினார்கள் (சகரி 12:10)
- அவர் இரண்டு கள்ளர் நடுவே மரித்தார் ; மேன் மக்கள்



நடுவே அடக்கம் பண்ணப்பட்டார் (ஏசா 53:9)

## இயேசுவின் அறிவிப்பு

நமது இரட்சிப்பின் நற்செய்திக்கு தாம் சிலுவையில் அறையப்படுவது அவசியம் என்று பலமுறை இயேசு தமது சீஷர்களுக்கு அறிவித்தார். இந்த முன்னறிவுப்புகள் மத் 17:22 மாற்கு 8:31, லூக் 9:22, யோ 3:14,15) ஆகியவற்றில் எழுதப்பட்டுள்ளன.

## கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

சிலுவை மரணத்திற்கு மூன்று நாட்களுக்குப் பின்பு எல்லா அதிசயங்களிலும் மிகப்பெரியது நிகழ்ந்தது ; கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார். வேதாகமம் நமக்குக் கூறுகிறது. ஓய்வுநாள் முடிந்து வாரத்தின் முதலாம் நாள் விடிந்துவருகையில் மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள் அப்பொழுது பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிந் திறங்கிவந்து வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி அதின் மேல் உட்கார்ந்தான். அவனுடைய ரூபம் மின்னல்போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல வெண்மையாகவும் இருந்தது. காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள். தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி நீங்கள் பயப்படாதிருங்கள். சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை ; தாம் சொன்ன படியே உயிர்த்தெழுந்தார்" (மத்தேயு 28:1-6)

## சரித்திரம் கூறும் சாட்சி

இயேசு சிலுவையிலறையப்பட்டார் என்று சரித்திரச்

சான்றுகள் சாட்சி பகர்கின்றன. இயேசு சிலுவையிலறையப்பட்டது சரித்திர பூர்வமானது என பண்டைய புறஜாதி மற்றும் யூத வரலாற்று ஆசிரியர்கள் சாட்சி கொடுத்துள்ளனர்.

இயேசு சகித்த வேதனைகள் உட்பட அவருடைய சிலுவை மரணத்தை கி.பி 55-ல் டாசிட்டஸ் என்னும் புறஜாதி வரலாற்று அறிஞர் விவரமாக எழுதியுள்ளார்.

இயேசுவின் சிலுவை மரணத்திற்குச் சில ஆண்டுகளுக்குப் பின் பிறந்த யூத வரலாற்று அறிஞர் ஜோசிப்பஸ், தமது நாட்டின் வரலாற்றை இருபது பகுதிகளாக எழுதியுள்ளார். இயேசு பொந்தியு பிலாத்துவின் கட்டளையின்படி சிலுவையில் அறையப்பட்டார் என்று அதில் அவர் எழுதியுள்ளார்.

கி.பி 100ல் வாழ்ந்த கிரேக்க வரலாற்று அறிஞர் லூசியன் கிறிஸ்துவையும், கிறிஸ்தவர்களையும் குறித்து எழுதினார். "இந்த உலகத்தில் ஒரு புதிய மார்க்கத்தைக் கொண்டு வந்தபடியால் பலஸ்தீனாவிலேயே சிலுவையிலறையப்பட்ட இந்தப் பெரிய மனிதனை கிறிஸ்தவர்கள் இன்னமும் தொழுது கொள்ளுகிறார்கள்" என்று அவர் எழுதியுள்ளார் .

## சிலுவை என்னும் சின்னத்தின் சாட்சி

யூதர்களின் புனித நூலான தல்மூத் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார் என்று சாட்சி கொடுக்கிறது. இயேசு இஸ்ரவேலரை வஞ்சித்து வழிதவறப்பண்ணிய ஒரு மந்திர வாதியானதால் பஸ்காபண்டிகைக்கு , ஒரு நாள் முன்பு அவர் சிலுவையில் அறையப்பட்டார் என்று தல்மூத் 1943-ம்



ஆண்டு பதிப்பு, பக்கம் 42-ல் கூறுகிறது காலம் காலமாய் நிலவும் சாட்சி

இயேசு சிலுவையிலறையப்பட்டதை நினைவுகூறும்படி கிறிஸ்தவர்கள் காலம் காலமாய் ஆசரிக்கும் கர்த்தருடைய இராப்போஜனம் இயேசு சிலுவையில் அறையப்பட்டார் என்பதற்கு காலகாலத்திற்குமான ஜீவனுள்ள சாட்சி ஆகும்.

## இஸ்லாத்தில் சிலுவை

குர்ஆனை நாம் படிக்கும்போது, இயேசு சிலுவையிலறையப்பட்டார் என்பதை இந்நூல் மறுத்தாலும், அவர் பரமேறுவதற்கு முன் மரித்தார் என்பதை மறுக்கவில்லை. மூன்று வசன பகுதிகள் அவருடைய மரணத்தைக் குறிப்பிடுகின்றன. வேறு இரண்டு வசன பகுதிகள் அவர் கொல்லப்பட்டார் என்பதை குறிப்பிடுகின்றன.

அ. "நான் பிறந்த நாளிலும், நான் மரிக்கும் நாளிலும் நான் உயிர்ப்பெற்றெழும் நாளிலும் என்மேல் சமாதானம் உண்டவாதாக" (ஸூரா 19:33)

ஆ ... அல்லாஹ் கூறினார் மரியமின் மகனான ஈசாவே இதோ நாம் உம்மை மரிக்கச் செய்வோம், உம்மை எம்மிடம் எடுத்துக் கொள்வோம், விசுவாசியாதவர்களிடமிருந்து உம்மை விடுவிப்போம் (ஸூரா 3:55)

இ. "ஓ!, மரியமின் மகனான ஈசாவே, அல்லாஹ்வை யன்றி என்னையும் என் தாயாரையும் இரண்டு

தெய்வங்களாக வைத்துக் கொள்ளுங்கள் என்று மனுக்குலத்திடம் நீர் கூறினதுண்டோ என்று அல்லாஹ் கேட்கும்போது, நீர் மகிமைப்படுவீராக... என்னுடைய ஆண்டவரும் உங்களுடைய ஆண்டவருமான அல்லாஹ்வையே தொழுது கொள்ளுங்கள்... நீர் என்னை எடுத்துக் கொள்ளும்போது (மரிக்கச் செய்யும்போது) அவர்களுக்கு நீர்தான் பாதுகாவலர் என்று, நீர் கட்டளையிட்டதை மட்டுமே அவர்களிடம் கூறினேன் என்று ஈசா கூறினார். (ஸூரா 5:116,117)

ஈ. "மெய்யாகவே நாம் மோசேக்கு (மூஸாவுக்கு) வேத வாக்கியங்களைக் கையளித்து, அவருக்குப் பின் தொடர்ச்சியாகப் பல தூதுவர்களை அனுப்பினோம். மரியமின் மகனான ஈசாவுக்கு தெளிவான சான்றுகளை அளித்து, பரிசுத்த ஆவியினால் அவருக்கு நாம் ஆதரவளித்தோம். அல்லாஹ்விடமிருந்து ஒரு தூதுவர் நீங்கள் விரும்பாத ஒன்றுடன் வரும்போது, நீங்கள் முரட்டாட்டமுள்ளவர்களாகி, சிலரை நீங்கள் விசுவாசிக்கமாட்டீர்கள், சிலரை நீங்கள் கொன்றீர்கள்" (ஸூரா 2:87)

உ. "இவர்கள் இதோ! எந்தவொரு தூதுவரும் அக்கினியால் பட்சிக்கப்படும் ஒரு காணிக்கையைக் கொண்டு வரும் வரைக்கும் அவரை விசுவாசியாதபடி எங்களை அல்லாஹ் மாற்றி விட்டார் என்று கூறும் அதே ஆட்கள் தான் கூறுவீராக! எனக்கு முன்னே அற்புதங்களைக் கொண்டு தூதுவர்கள் நீங்கள் கூறுவதுபோல



வந்தனர். நீங்கள் உண்மையுள்ளவர்களானால் அவர்களை ஏன் கொன்றீர்கள்?" (ஸூரா 3:183)

## குர்-ஆன் வியாக்கியானிகளின் கருத்துக்கள்

அல்-பைதாவி கூறினார் : ஒரு கூட்டம் யூதர்கள் இயேசுவையும் அவருடைய தாயாரையும் அவதூறு செய்தனர். ஆகவே, அவர் அவர்களைச் சபித்து குரங்குகளாகவும் பன்றிகளாகவும் மாற்றினார். யூதர்கள் அவரைக் கொல்ல முடிவு செய்தனர். ஆனால் கடவுளோ, நாம் அவரை உயர்த்துவேன் என்று கூறினார். இயேசு தம் நண்பர்களைப் பார்த்து, யூதர்கள் சிலுவையிலறைந்து கொல்லும்படியாக என்னைப்போல தோற்றமளிக்க உங்களில் யார் சம்மதிக்கிறீர்கள் என்று கேட்டபோது ஒருவன் சம்மதித்தான், அவன் சிலுவையிலறையப்பட்டு கொல்லப்பட்டான்.

யூதர்கள் இயேசுவை சிறைபிடித்துக் காவலில் வைத்துச் சென்றனர், அப்பொழுது அவர் அதிசயமான முறையில் பரலோகத்திற்கு எடுக்கப்பட்டார். இறைவன் அதேநேரம் அந்தக் காவலாளிக்கு இயேசுவின் தோற்றத்தைக் கொடுத்தார். எனவே இயேசுவுக்குப் பதிலாக அவனை அவர்கள் சிலுவையில் அறைந்துவிட்டனர், "அவன் நான் இயேசு இல்லை" என்று கதறிக்கொண்டே இருந்தான் என்று சிலர் கூறுகின்றனர்.

இயேசுவின் சீஷனான யூதாஸ் ஒரு மாய்மாலக்காரன் இயேசு எங்கிருக்கிறார் என்று யூதர்களுக்குக் காண்பிக்க அவர்களுடன் அவன் வந்தபோது, இறைவன் அவனை

இயேசுவைப்போலத் தோன்றும்படி செய்யவே, யூதர்கள் அவருக்குப் பதிலாக இவனை கொன்றனர் (பைதாவி II 127, 128)

ஜமி அல்பையான் என்னும் நூலில் அல் தபாரி பல கதைகளைக் கூறுகிறார். அவைகளில் ஒன்றில் வஹாப் இபின் முனாபெத் கூறுகிறார் ; இயேசு தமது பதினேழு சீஷர்களுடன் ஒரு வீட்டிற்கு வந்தார். அவர்கள் வீட்டில் நுழையும்போது இறைவன் அவ்வீட்டிலுள்ளவர்களை இயேசுவைப்போலத் தோன்றும்படி செய்தார். யூதர்கள் அவர்களை நோக்கி, மந்திரக்காரர்களே உங்களில் யார் இயேசு என்று நீங்கள் சொல்லாவிட்டால், உங்கள் எல்லாரையும் நாங்கள் கொன்றுவிடுவோம் என்றனர் உங்களில் யார் பரதீசை விலைக்கு வாங்கப்போகிறீர்கள்" என்ற இயேசு ஏற்கனவே தம்முடைய சீஷர்களைக் கேட்டிருந்தார். எனவே ஒரு சீஷன் நான் தான் இயேசு என்று சொல்லி கொல்லப்பட்டான்.

சனாவி, இபின் குதைர், கலலான் மற்றும் ஜமாக்ஷரி ஆகியோரின் வியாக்கியானங்களில் இதுபோன்ற கதைகள் பல கூறப்பட்டுள்ளன ; ஆனால் இந்தக்கருத்தை நாம் பேசி முடிக்கு முன் இயேசுவைப்போலத் தோற்றமளித்தல் என்னும் கதையை மறுத்த பக்கிர் அல்தின் அர்ரஸி அவர்களின் கூற்றைச் சுட்டிக்காட்டி இவ்விவாதத்தை முடிக்க வேண்டும். ஓ இயேசுவே! நான் உம்மை மரிக்கச் செய்து, என்னிடமாக உயர எடுத்துக்கொள்வேன். என்றும் ஸூரா 3:55 குறித்து ரஸி கூறுகிறார். நாம் ஒரு பிரச்சனையை எதிர்கொள்கிறோம். இறைவன் இயேசுவை உயர எடுத்துக்கொண்ட போது இன்னொரு நபரை இயேசுவைப் போலத் தோற்றமளிக்கச் செய்தார் என்று குரான் கூறுகிறது அவர்கள் அவரைக்



கொல்லவுமில்லை, சிலுவையிலறையவுமில்லை, இதைக் குறித்து அநேகம் முரண்பாடான கதைகள் நமக்கு உண்டு. இயேசுவை யூதர்களிடம் காட்டிக் கொடுத்த எதிரிகளை இறைவன் இயேசுவைப் போலத் தோற்ற மளிக்கச் செய்தார் என்று சிலர் கூறுகின்றனர். அவருடைய சீஷர்களிலொருவன் அவரைப்போலத் தோற்ற மளிக்கச் செய்யப்பட்டு அவருக்குப் பதிலாகக் கொல்லப்பட்டான் என்று வேறு கதைகளும் உண்டு. இயேசுவைப் போல வேறொரு நபர் தோற்றமளிப்பது என்பது கீழ்வரும் பிரச்சினைகளை உருவாக்குகிறது.

1. ஒரு நபர் இன்னொரு நபரைப் போலத் தோற்றமளிக்கும் கருத்தை நாம் ஏற்றால் மாயத் தோற்றத்தை நாம் ஏற்றுக் கொள்கிறோம். அப்படியானால், நான் என் மகனைப் பார்க்கும்போது, அவன் உண்மையிலேயே என் மகன்தானா அல்லது அவனைப்போலத் தோற்றமளிக்கம் வேறொரு நபரா என்ன சந்தேகம் ஏற்படும். புலன்கள் உணர்வெழுச்சிகளை நம்பமுடியாது. ஆகவே இறைதூதர் பிரசங்கம் செய்ததைக் கண்ட தோழர்களுக்கு பிரசங்கம் செய்தது உண்மையில் இறைதூதர் தானா அல்லது இறைதூதர் போலத் தோற்றமளித்த ஒருவரா என்ற நிச்சயமற்ற நிலை ஏற்பட்டிருக்கும். இயற்கை விதிகள் செயலற்றுப் போயிருக்கும். தகவல்களை காலம்காலமாக அறிவித்தவர்கள் நம்பகமானவர்கள் தானா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். முதலில் தகவல் அறிவித்தவர் இறைதூதரைப் போலத் தோற்றமளித்த ஒருவரைக் கண்டபடியால் அவர் சொன்ன செய்தி

தவறானதாக இருக்கக்கூடும். சுருக்கமாகக் கூறினால் இக்கருத்தை நாம் ஏற்றுக்கொள்வது பொய்த்தோற்றத்தை நாம் நம்ப ஆரம்பித்து தீர்க்கதரிசனங்களை ரத்து செய்வதில் முடிவடையும்.

2. இறைவன் காபிரியேலை எப்போதும் இயேசுவுடன் இருக்கும்படி கட்டளையிட்டிருந்தார். நாம் அவரை பரிசுத்த ஆவியைக் கொண்டு தாங்கினோம். (ஸூரா2:87) என்பதற்கு பெரும்பான்மையான வியாக்கியானிகள் இப்படித்தான் விளக்கமளிக்கின்றனர். காபிரியேலின் ஒரு சிறகின் ஓரம் முழு மனுக்குலத்தையும் பாதுகாப்பதற்குப் போதுமானது என்றும் அவர்கள் கூறுகின்றனர். அப்படியானல் காபிரியேல் ஏன் இயேசுவை யூதர்களிடமிருந்து பாதுகாக்கவில்லை? இயேசுவும் கூட மரித்தோரையும் எழுப்பவல்லவர், ஆகவே தம்மைத்துன்புறுத்த விரும்பிய யூதர்களைக் கொன்று ஏன் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவில்லை அல்லது குறைந்தது அவர்கள் தம்மை எதிர்க்காதபடி ஏன் அவர்களைச் செயிலிழக்கச் செய்யவில்லை அல்லது வேறு ஏதாவது நோய்களால் அவர்களை ஏன் வாதிக்கவில்லை?

3. இயேசுவைப் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்வதன் மூலம் இறைவன் அவரைத் தப்புவித்திருக்க முடியும். அப்படியிருக்க இன்னொருவரை இயேசுவைப் போலத் தோற்றமளிக்கச் செய்ய வேண்டிய அவசியம் என்ன? காரணமின்றி இன்னொரு நபரை இது



மரணத்துக்குள்ளாக்குகிறதல்லவா?

4. இறைவன் இன்னொரு நபரை இயேசுவைப் போலத் தோற்றமளிக்கச் செய்து, இயேசுவை உயர எடுத்துக்கொண்டிருந்தால், இந்த மற்ற நபர் இயேசு அல்ல என்றாலும் அவர் இயேசுதான் என்று மக்கள் கருதுகிறார்கள் தேவன் ஞானமுள்ளவராகச் செயல்படும்போது, மக்களை அவர் தவறாக வழிநடத்துவார் என்பது பொருந்தாத ஒரு காரியம்.

5. உலகமெங்குமுள்ள கிறிஸ்தவர்கள் இயேசுவை மிக அதிகமாக நேசித்தாலும், சிலுவையிலறையப்பட்டு மரித்த இயேசுவை தாங்கள் கண்டதாக அவர்களில் பலர் அறிவித்துள்ளனர். இதை நாம் மறுதலித்தால், அதிகார பூர்வமான தகவல்களின் தொடர்ச்சியை நாம் மறுதலிக்கிறோம். இதை மறுப்பது. தீர்க்கதரிசனத்தையும், முஹம்மது, இயேசு மற்றும் இதர தீர்க்கதரிசிகள் குறித்த சரித்திர பூர்வ ஆதாரத்தையும் கூட மறுப்பதாக ஆகிவிடும்.

6. இயக்கங்களின் தொடர்ச்சி சிலுவையிலறையப் பட்டவர் நீண்டகாலம் வாழ்ந்ததாக நமக்குச் சொல்லுகிறது. அந்நபர் இயேசு அல்லாது வேறு நபராக இருப்பாரானால், நான் இயேசு அல்ல, வேறொரு நபர் என்று கூறியிருப்பார். பொதுவில் பகிரங்கமாகவே இதை அவர் அறிவித்திருப்பார், பலரும் அதை நன்கு அறிந்திருப்பார்கள். இப்படி ஏதும் சம்பவியாதபடியால் விஷயம் நீங்கள் கூறுவதற்கு முற்றிலும் வித்தியாசமானது என்பதை அது

காண்பிக்கிறது. (அல் டஃப்சீர் அல்கபிர் 12:99)

## யுத்தத்தை உருவாக்கும் கிளர்ச்சிக்காரர்கள்

அருமை நண்பரே, உங்கள் கடிதத்தில், மேற்கத்திய கிறிஸ்தவர்கள் ஆயுதங்களை ஏந்துமட்டும் உலகம் அழிவைக் கண்டதில்லை என்று கூறியிருந்தீர்கள். இவ்விஷயத்தில் உங்கள் கூற்று சரித்திரத்திற்கு முரணாக இருக்கிறது. கிறிஸ்துவ மார்க்கம் உருவாவதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே யுத்தங்களும் அழிவும் உண்டாயிருந்தன. இவ்விஷயத்தை முடிக்கும் முன் கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் ஆகிய இரண்டிலும் யுத்தத்திற்கான காரணங்களை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

## கிறிஸ்தவத்தில் உள்ளவை

யோவான் ஸ்நானன் கொல்லப்பட்டார் என்று கிறிஸ்து வானவர் கேள்விப்பட்டபோது நாசரேத்தைவிட்டு கப்பர் நகூமிலே குடியிருக்கும்படி வந்தார். கலிலேயா முழுவதும் பிரயாணம் செய்து எல்லாவிதமான வியாதிகளையும் குணமாக்கி, இறைவனுடைய இராஜ்யத்தின் நற்செய்தியைப் பிரசங்கித்தார். வியாதியுள்ளவர்கள் மற்றும் பிசாசினால் பிடிக்கப்பட்ட எல்லாரையும் அவரிடம் கொண்டு வந்தனர். அவர்கள் யாவரையும் அவர் குணமாக்கினார்.

இயேசு ஜனக்கூட்டத்தைக் கண்டபோது மலையின் மீது ஏறி அவர்களுக்குப் போதித்ததாவது; ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள், பரலோக இராஜ்யம் அவர்களுடையது. துயரப் படுகிறவர்கள் பாக்கியவான்கள்,



அவர்கள் ஆறுதலடைவார்கள். சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். நீதியின்மேல் பசி தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் திருப்தியடைவார்கள். இரக்கமுள்ளவர்கள் பாக்ககியவான்கள், அவர்கள் இரக்கம் பெறுவார்கள். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள் சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் ; அவர்கள் தேவனுடைய புத்திரர் எண்ணப்படுவார்கள். நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் ; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள். நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் ; பரலோக இராஜ்யம் அவர்களுடையது. என்னிமித்தம், உங்களை நிந்தித்து, துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான் களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டுக் களிகூறுங்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே (மத்தேயு 5:3-12)

நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிச னங்களையானாலும் அழிக்கிறதற்கு நான் வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள் ; அழிக்கிறதற்குல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் , பூமியும் ஒழிந்துபோனாலும் நியாயப் பிரமாணத்திலுள்ளதெல்லாம்

நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத்தேயு 5:17-18)

கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலை செய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும் பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான், தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான், மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு எதுவாயிருப்பான் (மத்தேயு 5:21,22)

விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத் தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று. (மத்தேயு 5:27-28)

தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும் தள்ளுதற்சீட்டை அவளுக்குக் கொடுக்கக்கடவன் என்று உரைக்கப்பட்டது. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன் அவளை விபசாரஞ்செய்யப் பண்ணுகிறவனாயிருப்பான். அப்படித் தள்ளிவிடப் பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிற



வனாயிருப்பான். (மத்தேயு 5;31,32)

அன்றியும் பொய்யாணையிடாமல், உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்துவதாக என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் ... உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்! இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும். (மத்தேயு 5:33-37)

கண்ணுக்குக் கண், பல்லுக்குப்பல் என்று உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம். ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு உன்னோடு வழக்காடி, உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால் அவனோடு இரண்டு மைல் தூரம் போ (மத்தேயு 5:38-41)

உனக்கடுத்தவனைச் சிநேகித்து உன் சத்துருவைப் பகைப்பாயாக என்ற சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்... உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள், அவர் தீயோர் மேலும், நல்லோர்

மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி (மத்தேயு 5:43-45; மற்றும் மத்தேயு 6:1-7:29)

## இஸ்லாத்தில் உள்ளவை

இஸ்லாமிய அரசை நிறுவியவர் ஓமர் இபின் எல் கத்தாப் என்று வரலாறு கூறுகிறது. அவர் பின்வரும் கோட்பாடுகளைக் கடைபிடித்தார்.

**A.** அரசாங்க மதம் இஸ்லாம் அரபிய தீபகற்பத்தில் இரண்டு மதங்கள் ஒரே நேரத்தில் இருக்க முடியாது என்று இறைதூதர் தாம் இறப்பதற்கு முன் கூறினார். (இபின் ஹிஷாம் எழுதிய இறை தூதரின் வாழ்க்கை 813)

**B.** அரபிய தீபகற்பத்திற்கு வெளியிலிருக்கும் அரபியர் ஜீகாதிகளாக தொடர்ந்து இருக்க வேண்டும். அதாவது மதம் சார்ந்த இராணுவக் குழு.

குர்ஆனிலுள்ள அநேக வசனங்கள் யுத்தத்தை அங்கீகரித்து போர் செய்வதை ஊக்குவிக்கின்றன. "ஓ இறைதூதரே! யுத்தம் செய்யும்படி மக்களை ஊக்கப்படுத்துவீராக. உங்களில் உறுதியானவர்கள் இருபதுபேர் இருப்பார்களானால் இருநூறுபேரை அவர்கள் மேற்கொள்வார்கள். உங்களில் உறுதியானவர்கள் நூறுபேர் இருப்பார்களானால் அவிசுவாசிகளான ஆயிரம் பேரை அவர்கள் மேற்கொள்ளுவார்கள். (ஸூரா 8:65)

"வேத வாக்கியங்கள் கொடுக்கப்பட்டு அல்லாஹ்வையும் கடைசிநாளையும் விசுவாசியாத, அல்லாஹ் தம்முடைய தூதர் மூலமாக, தடைசெய்தவைகளைத் தடை செய்யாத, சத்தியத்தின்



மார்க்கத்தைப் பின்பற்றாதவர்கள், உடனடியாக பணிந்து, கீழ்ப்படுத்தப்படும்படியாக, அவர்களுக்கு விரோதமாக யுத்தஞ்செய்யுங்கள்". (ஸூரா 9:29)

"அவர்களை நீங்கள் எங்கு கண்டாலும் அவர்களைக் கொன்று போடுங்கள். உங்களை எந்த இடங்களிலிருந்து அவர்கள் விரட்டினார்களோ அந்த இடங்களிலிருந்து அவர்களை விரட்டுங்கள் ஏனெனில் ஒற்றுமையின்மை கொலை செய்வதை விட மோசமானது". (ஸூரா 2:191)

"ஒற்றுமையின்மை ஒழியும்வரை, மார்க்கம் அல்லாஹ்வுடைய தாக ஆகும்வரை அவர்களோடு யுத்தம் பண்ணுங்கள்" (ஸூரா 2;193)

"அல்லாஹ்வின் வழியிலே கொல்லப்பட்டவர்களை மரித்தவர்களாக எண்ணாதேயுங்கள். அவர்கள் வாழ்கிறார்கள்". (ஸூரா 3;169)

"எந்தவொரு பணியாளரின் பணியையும், அவர் ஆணோ அல்லது பெண்ணோ இழக்கப்பட்டுப் போகும்படி நான் விடுவதில்லை ஆகவே ஒன்றிலிருந்து மற்றொன்றிக்குச் செல்லுங்கள். என்னிமித்தம் தங்கள் வீடுகளிலிருந்து துரத்தப்பட்டு, ஓட நேர்ந்தவர்கள், நஷ்டமடைந்தவர்கள், யுத்தம் செய்து கொல்லப்பட்டவர்கள் ஆகியோரது தீய செயல்களை அவர்களினின்று அகற்றி, மெய்யாகவே ஆறுகள் பாயும் தோட்டங்களுக்கு அல்லாஹ்வின் ஒரு பிரதிபலனான அதில் நான் அவர்களைக் கொண்டுவருவேன். பிரதிபலன்களில் சிறந்தது அல்லாஹ்விடமே உள்ளது" (ஸூரா 3:195)

"(ஓ முஹம்மதுவே) அவர்கள் புனித மாதத்தில் யுத்தம் செய்வதைக்குறித்து உம்மைக் கேள்விகேட்கிறார்கள். கூறுவீராக : புனித மாதத்தில் யுத்தம் செய்வது பெரிய மீறுதல்தான், ஆனால் அல்லாஹ்வின் வழியிலிருந்து மனிதரைத் திருப்புவது, அவர்கள் அவருக்குக் கீழ்ப்படியாமற் போகச்செய்வது, தீட்டுப்படுத்தப்படக்கூடாத தொழுகையிடத்தி லிருந்து அவர்களை வெளியேற்றுவது ஆகியவை அதைவிடப் பெரிய மீறுதலாகும் ஒற்றுமையின்மை கொலை செய்வதை விட மோசமானதாகும். அவர்களால் கூடுமானால் உங்கள் மார்க்கத்திலிருந்து உங்களை வழி விலகச் செய்யும் வரை யுத்தம் செய்வதிலிருந்து அவர்கள் ஓயமாட்டார்கள்." (ஸுரா 2:217)

"ஓ! விசுவாசிகளே, உங்கள் அருகிலிருக்கும் அவிசுவாசிகளை எதிர்த்து யுத்தம் பண்ணுங்கள். உங்களில் அவர்கள் கடுமையைக்கண்டு, அல்லாஹ் தமக்குரிய கடமையைச் செய்பவர்களுடன் இருக்கிறார் என்பதை அறியட்டும்". (ஸுரா 9:123)

அவர்கள் அவிசுவாசிப்பதுபோல நீங்களும் அவிசுவாசிக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள், நீங்களும் அவர்களுக்குச் சமமாயிருக்க வேண்டு மென்பதற்காக இப்படி எதிர் பார்க்கின்றனர். ஆகவே அல்லாஹ்வின் வழியில் தங்கள் வீடுகளை அவர்கள் துறக்கும் வரை அவர்களிலிருந்து நண்பர்களைத் தெளிவு செய்ய வேண்டாம். அவர்கள் பின்வாங்கினால் அவர்களை எங்கெல்லாம் காண்கிறீர்களோ அங்கெல்லாம் பிடித்துக் கொன்று போடுங்கள். அவர்கள் நடுவிலிருந்து நண்பரையோ அல்லது உதவியாளரையோ தெரிவு செய்ய



வேண்டாம் (ஸுரா 4:89)

## கிறிஸ்தவமும் யுத்தமும்

இயேசுவாலும் அவரது அருள்பெற்ற அப்போஸ்தலராலும் போதிக்கப்பட்டதும், இன்றைக்கு பல சபைகளில் கைக்கொள்ளப்படுவதுமான மெய்யான கிறிஸ்தவத்தை ஒருவேளை திரு அலாவி அவர்கள் ஏற்றுக்கொண்டார். கிறிஸ்தவர் என்று அழைக்கப்படும் ஒவ்வொருவருமே உண்மையானவர் இல்லை என நாம் அறிவோம். பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. (மத்தேயு 7:21) என்று இயேசு சொன்ன போது இதைத்தான் சுட்டிக்காட்டினார். தீய வாய்ப்பாக பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் பெயரளவில் தான் அப்படியிருக்கிறார்கள்.

மெய்க் கிறிஸ்தவனை அடையாளங்காட்ட இயேசு கூறினார். அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா"? ( மத்தேயு 7:16) இயேசுவால் தரப்பட்ட இந்த அளவைக் கொண்டு நாம் எல்லாப் போதனைகளையும் அளந்துபார்க்க வேண்டும். ஒரு மரத்தின் நன்மையை அதன் இலைகள் மூலமாகவோ பூக்கள் மூலமாகவோ அல்ல அதன் கனிகள் மூலமாகவே நாம் அறிய முடியும். இயேசு தமது அளவற்ற ஞானத்தினால், சமாதான சகவாழ்வு மற்றும் ஒருவருக்கொருவர் புரிந்துகொள்ளுதலுக்காக இம்மனுக் குலம் அறிந்து கொண்ட மிகப்பெரிய பிரமாணத்தை

அளித்தார். ஆதலால் மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் ; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் (மத்தேயு 7;12) இந்த வசனமானது தங்கப்பிரமாணம் என்று அழைக்கப்படுகிறது. எங்குமுள்ள மக்களெல்லாரும் இப்பிரமாணத்தை கடைபிடித்தால், இப் பூமியை சமாதானம் மூடிக்கொள்ளும் ஏசாயாவின் தீர்க்கதரிசனமும் நிறைவேறும். அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள் என்று ( ஏசா 2:4) அவ்வசனம் கூறுகிறது.

யூத ரபியாகிய ஷமாய் அவர்களிடம் ஒருவர் சென்று அவர் ஒரு காலில் நின்று கொண்டு நியாயப்பிரமாணத்தைப் போதிக்கும்படி கேட்டபோது ஷமாய் அந்த நபரை ஒருசில வார்த்தைகளில் பதிலளித்து அனுப்பிவிட்டார். அதன்பிறகு அந்த நபர் ரபி ஹில்லெல் கூறினார் : பிரமாணம் என்னவென்றால் மற்றவர்கள் உங்களுக்கு என்ன செய்யக்கூடாது என்று நீங்கள் விரும்புகிறீர்களோ அதை மற்றவர்களுக்குச் செய்யாதிருங்கள் இயேசு இந்த எதிர்மறையான அறிக்கையை நேர்மறையாகக் கூறினார்.

சிலுவைப் போர்வீரர்கள் மீது உங்களுக்கு மிகுந்த கோபம் இருப்பதைக் கவனித்தேன்; சிலுவைப் போர்களுக்கு கிறிஸ்தவர்கள் தான் காரணம் என்றும் நீங்கள் கூறுகிறீர்கள். எதனால் அப்படிக் கூறுகிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. சிலுவைப் போராளிகளை மெய்க் கிறிஸ்தவர்களாகக் கருதமுடியாது. கிழக்கு பாரம்பரிய சபைகளை அவர்கள் கொள்ளையிட்டது இதற்குப் பலமான



ஆதாரமாகும். அவர்களுடைய ஒரே நோக்கம் நிலப் பகுதிகளைக் கைப்பற்றிச் சேர்த்துக் கொள்வதாகும்.

## இஸ்லாமும் யுத்தமும்

மெதினாவில் நிலைகொண்ட பிறகு சில மாதங்களுக்குள் முஸ்லிம்கள் மெக்காவைக் கைப்பற்ற விரும்பினார்கள். முஹம்மதுவின் தலைமையில் அவர்கள் குரைஷிகளை பழிவாங்க திட்டமிட்டார்கள் மெதினாவில் வீடுகளைக் கட்டி வாழ்வாதாரங் களைச் சேகரிப்பதிலும் ஈடுபட்டிருந்தபடியால் பழிவாங்குதல் தாமதமாயிற்று.

வெகு விரைவில் படையணிகளை அமைக்கலாயினர் அதில் முதலாவது படை முஹம்மதுவால் அமைக்கப்பட்டது. முஹம்மதுவின் உறவினரான ஹம்ஸா பென் அப்துல் முத்தலிப், தலைமை தாங்கிய அதில் 30 வீரர்கள் இருந்தனர். அவர்கள் முஹாஜெரீன் (மெக்காவிலிருந்து மெதினாவுக்கு ஓடினவர்கள்) ஆவர். அவர்கள் கடற்கரைக்கு அயிஸ் என்னுமிடத்திற்கு அனுப்பப்பட்டனர். அங்கே அபு ஜஹல் பென் ஹிஷாம் தலைமையில் குரைஷிலிருந்து வந்த 300 வீரர்களை எதிர் கொண்டனர். இரு சாராரும் யுத்தத்தை நிறுத்தும்படி நக்டி பென் அம்ரோ அல் கஹ்னி அவர்களுக்கு புத்தி சொல்லி பிரித்து விட்டார்.

முஹம்மது இப்படி மொத்தம் இருபத்தியேழு தாக்குதல்களை மெக்காவின் மீது நடத்தியதாக இபின் ஹிஷாம் கூறுகிறார். அவைகளில் முக்கியமானவை வருமாறு

## முதலாவதான வதான் தாக்குதல்

ரத்வியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட புவட் தாக்குதல்

யான்போவாவிற்குள் இருந்து மேற்கொள்ளப்பட்ட அஷிரா தாக்குதல்

பதர் தாக்குதல் இதில் அவர்கள் குரைஷின் தலைவர்களைக் கொன்றனர்.

பெனி சலிம் தாக்குதல் இதில் அவர்கள் கதார் என்னுமிடத்தை அடைந்தனர்.

அபு சுஸ்பியன் பென் ஹர்பைக் கொல்ல நடத்தப்பட்ட சுவிக் தாக்குதல்

கட்ஃபான் தாக்குதல்

பெனி அல் நதெய்ர் தாக்குதல்

பஹ்ரானிலிருந்து நடத்தப்பட்ட பராதாக்குதல்

உஹீத் தாக்குதல் - இதில் முஸ்லிம் போராளிகள் கொல்லப்பட்டனர்

**நகிலிருந்து நடத்தப்பட்ட ஜட்அல்ருகா தாக்குதல்**

**கடைசி பதர் தாக்குதல்**

**தோமத் அல் கண்டல் தாக்குதல்**

**டிட்ச் தாக்குதல்**

**பெனி குரைசா தாக்குதல்**

**பெனி லெஹியன் தாக்குதல்**

**ஜி குர்ட் தாக்குதல்**

**பெனி அல்முஸ்டலக் தாக்குதல்**

**ஹீதைபியா தாக்குதல்**

**கைபர் தாக்குதல்**

**அம்ரத் அல்கதா தாக்குதல்**



**அல்ஃபத் தாக்குதல்**

**ஹீசானயின் தாக்குதல்**

**அல்தைஃப் தாக்குதல்**

## தபுக் தாக்குதல்

இந்த தாக்குதல்களில் பதர், உஹீத், டிட்ச், குரைஸா முஸ்டலர், கைபர், ஃபத், ஹீனெயின் மற்றும் தைஃப் ஆகிய ஒன்பதில் முஹம்மது சண்டையிட்டார். ( இபின் ஹிஷாம் எழுதிய அல்ஸிரா பகுதி 3,4 கெய்ரோ பதிப்பு 1936)

## விசுவாச துரோகத்திற்கு எதிரான யுத்தங்கள்

முஹம்மதுவின் மரணத்திற்குப் பின்பு அரபிய திபகற்பத்தின் தெற்கிலும் கிழக்கிலும் வாழ்ந்த சில கோத்திரத்தார் இஸ்லாத்தைத் துறந்தனர். விசுவாசத்தை விட்டவர்களுக்கு எதிராக யுத்தம் பண்ண போர்வீரர்களை அனுப்பவேண்டும் என்று இறைதூதரின் தோழர்கள் அபு பக்காரிடம் யோசனை கூறினார். ஆயினும் உஸாமா பென் ஜெயித்தின் படையை சீரியாவைக் கைப்பற்ற அனுப்ப வேண்டும் என்று காலிஃப் வலியுறுத்தினார். இறைதூதர் பறக்கச் செய்த கொடியை இறக்குவதற்கு விடமாட்டேன் என்று அவர் கூறினார். இறைதூதரின் தோழர்கள் காலித் இபின் அலி வாலீதின் தலைமையில் ஒரு புது படையணியை ஏற்படுத்தினர். கிழக்கு, தெற்கு மற்றும் மத்திய அரபியாவின் கோத்திரங்களையும் யேமன், நஜித் மற்றம் யமாமா ஆகிய இடங்களில் விசுவாசத்தை விட்டவர்களையும் அவர் திரும்பவும் இஸ்லாத்துக்குக் கொண்டுவர முடிந்தது. இப்படித்தான் காலித் இபின் அல் வாலீத் இஸ்லாத்தின் வாள்

என்று அழைக்கப்படலானார்.

இஸ்லாத்தில் கூட்டிச் சேர்க்கப்பட்ட கோத்திரங்களில் காணப்பட்ட ஆக்கிரமிப்பின் ஆவி தன்னை வெளிப்படுத்த ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. இதனாலேயே புதிய யுத்தங்கள் துவங்கின. அபு பக்கர் மரிப்பதற்கு ஒரு ஆண்டிற்கு முன் முஸ்லிம்களின் படையணிகள் தங்கள் விரிவாக்க யுத்தங்களைத் துவக்கினர்.

## இஸ்லாமிய சிறுபான்மையினரைத் துன்புறுத்தல்

கிறிஸ்தவ நாடுகளில் உள்ள இஸ்லாமிய சிறுபான்மையினர் துன்புறுத்தப்படுவதாகவும், இஸ்லாமிய நாடுகளில் உள்ள கிறிஸ்தவ சிறுபான்மையினரோ தங்கள் உரிமைகளைப் பெறுவதாகவும் குறிப்பிட்டிருந்தீர்கள்.

நான் நீங்கள் கூறுவதை மறுக்கிறேன். அமெரிக்க ஐக்கிய நாடுகளில், இஸ்லாமிய சிறுபான்மையினர் தங்கள் மார்க்கத்தைப் பின்பற்றுவதற்கு முழு சுதந்தரம் உண்டு. பல இஸ்லாமிய விரிவுரைகளை வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா தொடர்ந்து ஒலிபரப்பியுள்ளது. முஸ்லிம் இறையியல் அறிஞர் மஹேர் ஹேதௌட் இஸ்லாத்தை கிறிஸ்தவ வட்டாரங்களில் பரப்புவதை குறிப்பிட்டுப் பேசியுள்ளார். அமெரிக்காவில் சட்டவிரோதமான ஒரே இஸ்லாமிய வழக்கம் பலமனைவிகளைத் திருமணம் செய்வது தான்.

லெபனானில் ஷேக் டஹ் ரமௌலி ஆற்றிய ஒரு விரிவுரையிலிருந்து தெரியவந்ததாவது, மேற்கு ஜெர்மனியில் முஸ்லிம்கள் ஆதா பண்டிகையைக் கொண்டாட இடமில்லாமல் தவித்தபோது கிறிஸ்தவர்கள் ஒரு



ஆலயத்தை பண்டிகை கொண்டாடும்படி அவர்களுக்குக் கொடுத்தனர். முஸ்லிம்கள் இப்படி ஒருபோதும் செய்ய மாட்டார்கள். ஒரு அரபு இஸ்லாமிய நாடு ஒரு கிறிஸ்தவ சமுதாயத்துக்கு தன் எல்லைக்குள் ஆலயம் கட்ட அனுமதிக்கவில்லை என்பது இதற்கு ஆதாரமாகும்.

பிரிட்டனில் யூதர்களின் எண்ணிக்கையைவிட முஸ்லிம்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருப்பினும் அவர்களுக்கு நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் இல்லை என்று கூறுகிறீர்கள். இதற்குக் காணரம் என்னவென்றால் யூதர்கள் ஒருமனமாக, ஒரே கண்ணோட்டமுடையவர்களாய் உள்ளனர். ஆனால் அரபு முஸ்லிம்களோ தங்கள் சொந்த நாட்டிலிருக்கும் வேறுபாடுகளை அப்படியே எடுத்துக் கொண்டு பிரிட்டனுக்குச் சென்றுள்ளனர். இன்னும் மோசமான விஷயம் என்னவென்றால் சில இஸ்லாமிய அரசுகள் மேற்கு நாடுகளிலுள்ள தங்கள் எதிராளிகளைக் கொலை செய்யும்படி ஆட்களை அனுப்புகின்றன. அவர்களுடன் நல்மனம் பொருந்துவதற்குப் பதிலாக இப்படிச் செய்கின்றன.

பிலிப்பைன்ஸிலுள்ள முஸ்லிம்களைப் பொறுத்த வரை அங்கு இஸ்லாமிய புரட்சிய மார்க்கசம்பந்தமானது என்பதைவிட அதிகமாக அரசியல் நோக்குடையதாகும்.

மூளைச் சலவை பற்றிப் பேசுகிறீர்கள். கிறிஸ்தவத்தில் அப்படி எதுவுமில்லை. நம்முடைய பாவங்களைக் கழுவக் கூடிய இயேசுவின் இரத்தம் மட்டுமே எங்களிடத்தில் உண்டு.

திரு. அலாவி ஒரு எளிய குடும்பத்திலிருந்து வந்தவர் என்று கூறுகிறீர்கள். அப்போஸ்தலனாகிய பவுல் என்ன சொன்னார் என்று கூறட்டுமா? சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள் மாம்சத்தின் படி

ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும் படி தேவன் உலகத்தில் பயித்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும் அற்பமாய் எண்ணப்பட்ட வைகளையும், இல்லாதவைகளையும் தேவன் தெரிந்து கொணடார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமை பாராட்டாத படிக்கு அப்படிச் செய்தார். ( 1 கொரி 1:26-29)

நீங்கள் இறையியல் அறிஞர்கள் என்று அழைக் கிறவர்கள். நீங்கள் மிகவும் பெருமை கொள்கிறதற்கு ஏதுவாக முஸ்லிம்களாக மாறினவர்கள் குறித்து நான் மேலும் ஒன்று சொல்லட்டுமா? அவர்களால் கிறிஸ்தவத்திற்கு நஷ்டம் ஏதுமில்லை. அப்போஸ்தலனாகிய யோவான் இவர்களைக் குறித்தே இவ்வாறு கூறினார் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து போனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை; நம்முடையவர் களாயிருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே ; எல்லாரும் நம்முடையவர்களல்லவென்று வெளியாகும் படிக்கே பிரிந்து போனார்கள். (1 யோ 2:19)

## பாவம்

பாவம் என்னும் விஷயத்தையும் அதுபற்றி குர்ஆனில் குறிப்பிடப்படவில்லை என்பதையும் மறைக்க நீங்கள் முயற்சிக்கிறீர்கள். இருப்பினும் குர்ஆன் அதற்கு பெரும்



முக்கியத்துவம் கொடுக்கிறது.

குர்ஆனிலுள்ள கீழ்வரும் வசனங்கள் பாவத்தைக் குறித்த கருத்தை வெளிப்படுத்துகின்றன.

**குற்றம்** (பாவம்) இறைவன் உம்முடைய முந்தின மற்றும் பிந்தின பாவங்களை மன்னிக்கும்படி மெய்யாகவே உமக்கு வெளிப்படையான ஒரு வெற்றியை அளித்தோம் ( ஸூரா 48:1,2) **பாரம் (பாவம்) உம்முடைய முதுகை அழுத்திக்கொண்டிருந்த பாரத்தை உம்மிலிருந்து எடுத்துப்போடும்படி உம்முடைய நெஞ்சை நாம் திறக்கவில்லையா? (ஸூரா 94:2)**

**தவறுதல்** (நேர்வழியின்று அல்லது சத்தியத்தி லிருந்து தவறிப்போதல்) உம்மை ஓர் அநாதையாகக் கண்டு உமக்கு அவர் அடைக்கலம் கொடுக்கவில்லையா? உம்மை தவறு செய்பவராகக் கண்டு உம்மை அவர் வழிநடத்த வில்லையா? உம்மைத் தேவையுள்ளவராகக் கண்டு, உம்மைத் திருப்திப்படுத்தவில்லையா? (ஸூரா 93:6-8)

**தீமை செய்பவர்கள் :** தீமை செய்கிறவர்களாகிய மக்களிடம் போ என்று ஆண்டவர் மோசேயிடம் கூறியபோது ( ஸூரா 26:10) **தவறான செய்கை (பாவம்) : புறம்பான மற்றும் உள்ளான பாவத்தைத் துறந்துவிடுங்கள் ; மெய்யாகவே பாவத்தைச் சம்பாதித்தவர்கள் தாங்கள் சம்பாதித்தற்கேற்ற பலனை அடைவார்கள் (ஸூரா 6:120)**

பாவம் : ஒரு குற்றத்தையோ அல்லது ஒரு பாவத்தையோ சம்பாதித்து அதை குற்றமறியாதவர்கள் மேல்

சுமத்துபவன் எவனும் பழிச்சொல்லையும் வெளிப்படையான பாவத்தையும் சுமப்பான் (ஸுரா 4:112)

இப்பொழுது உங்களுடைய அறிக்கையையே நான் எடுத்துக்கொள்கிறேன். பாவம் மற்றும் மீட்பின் அவசியம் குறித்த உறுதியான விசுவாசம் ஆகியவை குறித்த விஷயத்தில் முதலில் மனதில் தோன்றும் காரியம் தங்களுடைய இரட்சிப்புக்காக ஏதாவது செய்வதற்கு புறஜாதிகள் காண்பிக்கும் சோம்பல் ஆகும்.

தேவனால் அருளப்பட்ட வசனத்தின் வெளிச்சத்தில் இந்த அறிக்கையை எடுத்துக்கொண்டால், மக்கள் சத்தியத்தைக் காணாதபடி தடுக்க அவர்கள் கண்களில் புழுதியைப் போடுகிற ஒருவர் மூலமாகவே இப்பிரச்சனை எழுகிறது என்பது உறுதியாகிறது. ரோமர் 5:12ல் நாம் வாசிக்கிறோம். இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவம் செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று.

மனிதன் தூய்மையானவனாகப் பிறந்தான் என்று சில தத்துவஞானிகள் கூறியுள்ளனர். கேடுள்ள ஒரு சூழலில் மனிதன் வாழுவானானால் அதனால் பாதிக்கப்படுகிறான். ஏனெனில் நற்குணவானாக இருக்க வேண்டிய மனிதனில் தீய இயல்புகளை நாடக்கூடிய உணர்ச்சிகள் உள்ளடங்கியுள்ளன.

## பாவம் சுதந்தரிக்கப்படுகிறது

எந்தவொரு உயிரினமும் தனதல்லாத வேறொரு வகை உயிரினத்தைப் பிறப்பிக்க முடியாது என்பதை அனுபவத்தின் வாயிலாக அறிகிறோம். ஒரு காளை எருது



ஆட்டுக்குட்டியைப் பிறப்பிக்க முடியாது. இயேசுவானவர் கூறியது போல மனுஷர் முட்செடிகளிலிருந்து திராட்சப் பழங்களைப் பறிக்கிறதில்லை இந்த விதியானது மனுக்குலத்தின் தந்தையான ஆதாமுக்கும் பொருந்தும், ஏனெனில் அவர் தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணினார். தேவன் தூய்மையான பரதீசிலிருந்து ஆதாமை வெளியேற்றி, பாவத்தினால் சபிக்கப் பெற்றநிலத்தில் வாழச்செய்தார். இதன் காரணமாக இயற்கையாகவே வெளியேற்றப்பட்டு பரதீசின் சுதந்தரத்தை இழந்த சக்திகளை ஆதாம் பிறப்பித்தார். பரிசுத்த வேதாகமம் இச் சத்தியத்தை தீர்க்கதரிசியாகிய தாவீதின் வார்த்தைகள் மூலம் உறுதிசெய்கிறது : மெய்யாகவே நான் துர்க்குணத்தில் உருவானேன் என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந் தரித்தாள் (சங் 51 :5)

விசுவாச வீரனாகிய அப்போஸ்தலனாகிய பவுலுக்கு அருளப்பட்ட தேவ வார்த்தைகளும் நமக்கு உண்டு. “அந்தப்படியே நீதிமான், ஒருவனாகிலும் இல்லை; உணர்வுள்ளவன் இல்லை தேவனைத் தேடுகிறவன் இல்லை ; எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள் ; நன்மை செய்கிறவன் இல்லை ; ஒருவனாகிலும் இல்லை ரோமர் 3:10-12)

ஆங்கில அறிஞரான ஹக்ஸ்லி எழுதினார் மனிதனின் பரிணாம வளர்ச்சி கொள்கை போன்று கேவலமாய் முடிவடைந்த வேறு எந்த ஆராய்ச்சியையும் நான் கண்டதில்லை ; மனிதன் தனக்குள்ளேயிருந்து அபரிமிதமான வல்லமையுடன் தன்னைக் கட்டுப்படுத்தும்

ஒரு சக்திக்குக் கீழ்ப்பட்டிருக்கிறான் என்பதை வரலாற்றின் இருண்ட சூழலுக்குப் பின்னிருந்து நாம் காண்கிறோம்... தன்னை அழிவுக்கு நேராக விரட்டும் சக்திக்கு அவன் ஒரு பெலவீனமான குருடான இரையாயிருக்கிறான் ; முடிவற்ற பயங்களுக்கு அடிமையாயிருக்கிறான், தனது அறிவுத் திறனை ஒரு பெரும் பாரமாக்கி, கவலைகளாலும், கஷ்டங் களாலும் தன்னுடலை வீணாக்குகிறான். ஆயிரக் கணக்கான வருடங்களுக்குப் பின்னும் இருந்த வண்ண மாகவே சண்டையிட்டும், துன்புறுத்தியும் வருகிறான். இப்படியாக தன்னிடத்தில் மரித்தவர்களைக் குறித்து புலம்பிக் கொண்டும் அவர்களுடைய கல்லறைகளைக் கட்டிக் கொண்டும் இருக்கிறான்?....

இந்த உண்மையை கிரகிக்க வரலாற்றிலிருந்து இப்படிப்பட்ட சாதுரியமான சாட்சிகளை ஒருவருக்கு நாம் காட்ட வேண்டுமா? தன்னுடைய சார்புகளையும் இயல்புகளையும் கண்டுபிடித்து பாவப்பிரமாணம் தன்னுள் வாசம்பண்ணுகிறது என்று கற்றிட தன்னையே ஆழமாக உய்த்து அறிவது போதாதா?

மனிதன் ஒழுக்க விதிகளை தன் விருப்பப்படி கடைபிடிக்க கூடாதவன் என்பதைக் காட்டும்படி மனிதனின் சுபாவச் சீர்கேடு வெளியரங்கமாயிருக்கிறதால் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் பாவத்தின் பிரசன்னம் உள்ளது என்பது எல்லாருக்கும் தெரிந்த உண்மையாயிருக்கிறது. தனிப்பட்ட விதத்தில் ஒருவன் மனந்திரும்பினாலும் அவன் பரிசுத்த ஆவியின் மூலமாக தேவனுடைய உதவியைப் பெற்றுக்கொள்ளாவிடில் அவன் தோல்வியடையக்கூடிய அபாயம் இருக்கவே செய்கிறது.



பாவத்தின் வரலாற்றை பல்வேறு காலகட்டத்தினூடே துரிதமாக கண்ணோக்குங்கள். மனிதனில் தீய நோக்கம் குடியிருப்பதை நீங்கள் தெளிவான நிருபணத்துடன் காண்பீர்கள். இதன் முதலாவது வெளிப்பாடு காயீன் தன் சகோதரனாகிய ஆபேலைக் கொலை செய்ததாகும். இருவருமே ஆதாமின் குமாரராயிருந்தனர்.

நீங்கள் சுவிசேஷத்தில் போதிக்கப்பட்ட இருவிஷயங்களை பாவம் மற்றும் மீட்பு ஆகியவை குறித்து ஏளனமாக எழுதியிருந்த வார்த்தைகளைப் படித்தபோது பெரும் விசனம் என் இதயத்தை ஆட்கொண்டது. கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை பாவம் மற்றும் சிலுவை மரணம் மூலம் மீட்பு என்ற கட்டுக்கதையாகச் சுருக்கிவிடலாம் என்று நீங்கள் எழுதியிருக்கிறீர்கள். "நாம் யாருக்கு வெளிப்படுத்தியிருக்கிறோமோ அவர்களைத் தவிர வேறு எவரையும் நாம் உமக்கு முன் அனுப்பவில்லை : இதை நீங்கள் அறியாவிட்டால் நினைவுகூறுதலின் மக்களைக் கேட்டுப்பாருங்கள்" (ஸுரா 16:43) என்று முஹம்மதுவிற்கு கட்டளையிடும் குர்ஆன் வசனத்திற்கு ஒப்பிட்டு இவ்விஷயத்தை விளக்குங்கள் என்று கிறிஸ்தவர்களைக் கேட்டுக்கொள்வது இதைவிட நன்றாயிருக்கும். இவ்வசனத்திற்கு ஜலாலன் தரும் விளக்கம் : தோரா மற்றும் சுவிசேஷம் ஆகியவற்றின் மீது அதிகாரமுடையவர்களே நினைவுகூறுதலின் மக்கள் அதுமேலும் கூறுகிறது : நாம் இறைநூலையும், நியாயவிதியையும், தீர்க்கதரிசி பதவியையும் அவர்களுக்கே கையளித்துள்ளோம். இவர்கள் அவைகளை விசுவாசியாவிடினும் அவைகளை அவிசுவாசியாத மக்களிடம் ஏற்கனவே அவைகளைக்

கையளித்துவிட்டோம். இறைவனால் வழிகாட்டப்பட்டவர்கள் இவர்களே ஆகவே அவர்களுடைய வழிகாட்டுதலைப் பின்பற்றுவீர்களாக. (ஸூரா 6:89-90)

பாவம் மற்றும் மீட்பினால் பாவநிவிர்த்தி என்னும் விஷயம் முக்கியமானதாகும். இதனை நாம் ஆழமாக ஆராயு முன்பு இதற்கான ஆயத்த நிலையில் பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள நிகழ்வுகளை, மனுஷடைய சிருஷ்டிப்பு முதல் உலகின் இரட்சிப்புக்காக தேவனுடைய அன்பை அசையச் செய்த சம்பவங்களை குறிப்பிடுவது தவிர வேறு வாய்ப்பு இல்லை

## முதலாவது விழுகை

தேவன் மனிதனைத் தமது சாயலிலும் ரூபத்தின்படியும் சிருஷ்டித்தார், தம்முடைய கற்பனைகளுக்கு அவன் முழுவதுமாகக் கீழ்ப்படிய வேண்டும் என்ற நிபந்தனையில், ஜீவனின் உடன் படிக்கையை அவனுக்குக் கொடுத்தார் என்று வேதாகமம் நமக்குக் போதிக்கிறது. தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி “நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்... தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டு வந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி, நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே



புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் ; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். (ஆதி 1:27-28;2:15-17)

ஆதாம் ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் ஏதேனின் பரதீசிலே தூய்மையான நிலையில் கர்த்தராகிய தேவனுடன் ஆவிக்குரிய ஐக்கியத்தை அனுபவித்து வாழ்ந்தார். இந்த ஐக்கியம் ஆதாமின் இதயத்தைச் சந்தோஷத்தினால் நிரப்பிற்று. ஆதாம் களங்கமற்றவராக இருந்தபடியால் அந்தக் களங்கமின்மை அவரை தேவனுடைய இருதயத் திற்குச் சமீபமாய்க் கொண்டு வந்தது. அவர் பூரணமான வராகவும், இருந்தார்.அவர் மெய்யான ஒரு விசுவாசியாக இருந்தார், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும்படி நீட்டப்படும் கரமாக விசுவாசம் விளங்கியது. அவர் நீதியுள்ளவராக இருந்தார். ஏனெனில் தேவனுடைய ஒளியை நீதியில் தான் ஒருவர் பிரதிபலிக்க முடியும்.

ஆதாம் இவ்விதமாக எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் அனுபவித்து வந்தாலும், மனுக்குலத்தின் தந்தையானவன் சோதிக்கப்படும்படி தேவன் அனுமதித்தார். அச்சோதனையின் நோக்கம் என்னவென்றால் இந்த எல்லா ஆசீர்வாதங்களையும் ஆதாமுக்கு அளித்த தேவனுக்குத் தொடர்ந்து அவர் கீழ்ப்படிதலாகவும், உண்மையானவராகவும் இருக்கும் நிலையைக் காத்துக் கொள்வாரா? வேறு வார்த்தைகளில், தேவன் மனுக்குலத்தின் பிதாவானவனை இப்படிச் சோதித்ததின் நோக்கம் சரியானதற்கும் தவறான தற்கும் இடையில் ஒரு தடுப்பு உள்ளது, அந்தத் தடுப்பைக் கடந்து

செல்வது மீறுதலாகும் என்று அவருக்குப் போதிப்பதுதான். விலக்கப்பட்ட கனிமரத்தை ஆதாமுக்கு அருகில் தோட்டத்தில் வைத்ததன் மூலம் தேவன் ஒரு அடையாள முறையில் இதைச் செய்தார்.

இந்தச் சோதனையின் எளிமை, சாத்தான் தனது வஞ்சனையுடன் தோன்றினதிலிருந்து வெளிப்படையாகிறது. ஆதிப்பெற்றோரின் நன்மையில் அக்கறையுள்ள ஓர் ஆலோசகன் போல் வஞ்சனைக்காரன் ஏவாளிடம் வருகிறான். அவனுடைய முதலாவது கேள்வி வஞ்சனையுடன் எளிமையானது: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ? என்றான் (ஆதி 3:1) ஆச்சரியமும் அதே நேரம் ஆட்சேபமும் அந்தக் கேள்வியில் வெளிப்படுகிறது. நான் ஆச்சரியப்படுகிறேன். தேவன் இப்படிச் சொல்லியிருக்கக் கூடும் என்று அதிகம் ஆச்சரியப்படுகிறேன் என்று பொல்லாங்கன் சொல்வது போல இது இருக்கிறது.

ஏவாள் இந்தச் சாத்தான் தந்திரமாக உருவாக்கின வார்த்தைகளுக்கு செவிகொடுத்தபோது, தேவனுடைய கட்டளையில் உள்ள நன்மையைக் கேள்வி கேட்கும் வண்ணமாக சந்தேகம் ஒரு மூடுபனி போல மூடியது. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும் நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் (ஆதி 3:5) நன்மைக்கு எதிராளியின் வார்த்தை சரியானது போலவும், நம்ப வைப்பதாகவும், அதாவது ஏவாளையும் அவரது துணைவரையும் தமக்குச் சமமாக வராதபடி தேவன் அந்நியாயமாய்த் தடுக்க முயன்றது போலத் தொனித்தது.



அப்பெண்ணின் இருதயத்தை சந்தேகம் ஆட்கொள்ளலாயிற்று, அவர் உடனேயே சாத்தானின் ஆசை வார்த்தைகளைச் செவிமடுக்கலானார். முதன்முறையாக அந்த மரம் புசிப்புக்கு நல்லதும், கண்களுக்கு மகிழ்ச்சியும், கவர்ச்சிகரமானதுமாய் ஏவாளுக்குக் காட்சியளித்து. ஆகவே அதின் கனியைப் பறித்துப் புசித்து, தன் கணவனுக்கும் கொடுத்தார், அவரும் புசித்தார். (ஆதி 3:6) இப்படியாக நமது ஆதி பெற்றோருக்கு விழுகை சம்பவித்தது. தேவனுடைய உண்மையையும், அவருடைய கட்டளையின் நன்மையையும் சந்தேகித்தபோது பெண்ணானவர் விழுந்தார். தான் ஏறவேண்டிய உயரத்திற்கும் மேலாய் அவர் ஏறினார். அறிவிலே தேவனுக்குச் சமமாய் விளங்க விரும்பி தன் கணவரையும் அதில் ஈடுபடுத்தினார். அப்படிச் செய்தததால் ஆதாம் தம் எல்லைகளை மீறி தேவனோடு தாம் செய்திருந்த உடன் படிக்கையை செல்லாததாக்கினார். நியாயப் பிரமாணத்தை மீறுகிறதே பாவம் (1யோ 3:4)

பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர்6:23) என்று வேதம் சொல்கிறது. நீ அதைப் புசிக்கும் நாளில் சாகவே சாவாய் (ஆதி 2:17) என்ற தேவ எச்சரிப்பின்படி ஆதாமும் ஏவாளும் நியாயத்தீர்ப்புக்கு ஆளானார்கள். அந்த மரணம் சரீர அழிவைக் குறிக்காமல் நித்திய உபத்திரவமான ஆத்தும மரணத்தைக் குறிக்கிறது. ஆதாம் கீழ்ப்படியாமற் போனபோது தேவனுடைய நியாயத்தீர்ப்பின் எல்லைக்குள் விழுந்தார். பூமி உன்னிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்ததோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும்

முளைப்பிக்கும். வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய். நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்பு மட்டும் உன்முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய் ; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய். (ஆதி 3:17-19)

இந்த நியாயத் தீர்ப்புக்குப் பின்பு கர்த்தராகிய தேவன் ஆதாமையும் ஏவாளையும் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றினார். அவர்கள் பூமியில் சுற்றித்திரிநது, நிலத்தைப் பண்படுத்திக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பிள்ளைகளைப் பெற்றனர், ஆனால் அவர்களும் பரதீசிலிருந்து விலக்கிவைக்கப்பட்டிருந்தனர்.

இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று. (ரோ 5:12)

மனிதன் பிறக்கும்போது தூய்மையானவனாகவே பிறக்கிறான். ஆனால் சீர்கேடுள்ள சூழலில் அவன் வாழுவதால் அது அவனைப் பாதித்து. பாவம் அவனுக்குள் புகுந்துவிடுகிறது என்று சில தத்துவஞானிகள் கூறுகின்றனர். பாவத்தின் பரவுதலுக்கு சூழ்நிலை காரணமாகிறது என்பது மெய்யே, ஆனால் மனிதன் பல்வேறு உள்ளுணர்வுகளுடன் பிறந்திருக்கிறான், அவைகளில் சில தீய நோக்கமுள்ளவை.

தேவன் ஆதாமுடன் ஜீவனின் உடன்படிக்கை செய்தார் என்று தெய்வீக போதனையிலிருந்து அறிகிறோம். இது ஆதாமுக்காக செய்யப்பட்டதல்ல அவருடைய



சந்ததிக்காகச் செய்யப்பட்டது. ஆகவே வேதவாக்கியம் கூறுகிறபடி ஆதாம் முழு மனுக்குலத்துக்கும் பிரதிநிதியானார் ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள் (1 கொரி 15;22)

ஆகையால், ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானது போல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள். (ரோமர் 5:18,19)

கிறிஸ்துவுக்கு முன்னிருந்தவர்களுக்கு தேவனுக்குப் பிரியமான அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் என்ன சம்பவித்தது? தேவனுடைய குமாரனை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையே; சிலுவையையும் அவர்கள் அங்கீகரிக்கவில்லையே என்ற கேட்டிருந்தீர்கள். இதற்குப் பதிலளிக்க ஆதாமுடைய விழுகைக்கும் பரதீசிலிருந்து வெளியேற்றப்பட்டதற்கும் முந்தின காலத்திற்கு நாம் திரும்ப வேண்டும். ஆதி 3:7,8 கூறுகிறது அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டாலும் அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து தங்களுக்கு அரைக்கச்சைககளை உண்டு பண்ணினார்கள். பகலின் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு

விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள்.

இங்கே பாவத்தின் முதலாவது விளைவு வெட்கம் என்றும் இரண்டாவது பயம் என்றும் மூன்றாவது நியாயத்தீர்ப்பு என்றம் காண்கிறோம். பரிசுத்த வேதாகமம் நமக்குச் சொல்லுகிறது. கர்த்தராகிய தேவன் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார் ( ஆதி 3;21) இந்தத் தோல் தன்னுடைய பலிகளில் பயன்படுத்தின மிருகங்களிலிருந்து கிடைத்தது என்று நம்பகமான வேத வியாக்கியானங்கள் மூலம் தெரியவருகிறது. மேலும் தேவன் ஆதாமையும் அவர் மனைவியையும் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியே துரத்தி, அவர்கள் எடுக்கப்பட்ட நிலத்தைப் பண்படுத்தும்படி செய்து, ஜீவ விருட்சத்துக்குப் போகும் வழியைக் காவல் செய்ய ஏதேனுக்குக் கிழக்கே சுடரொளி பட்டயத்துடன் கேரூபின்களை (தேவதூதர்) வைத்தார் என்றும் வேதம் சொல்லுகிறது.

சுருக்கமாக மனுக்குலத்தின் மீது ஆதாமின் ஒட்டுமொத்த தலைமைத்துவத்தினால் அவருக்கு வந்த எல்லாத் துன்பங்களும் அவருடைய சந்ததிக்கும் வந்தன என்று வேதாகமம் போதிக்கிறது.

ஆதாம் தமது சந்ததிக்குப் பிரதிநிதியானபடியால் தேவன் அவருக்குக்கொடுத்த வாக்குத்தத்தங்களும் அவருடையசந்ததிக்குரியவை. தேவன் ஆதாமை ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றின போது அது அவருடைய சந்ததிக்கும் பொருந்தியது. ஆதாம் மூலமாகச் சபிக்கப்பட்ட ஒரு உலகத்தில் அவர்கள் வந்து பிறந்து, அவரைப் போலவே



அவர்களும் மரணத்துக்கு உட்பட்டார்கள். மேலும் ஏவாளுக்கு விதிக்கப்பட்ட கர்ப்பவேதனை அவருடைய குமார த்திகளுக்கும் வந்தது. தத்துவஞானியான அபு எல் அலா இச்சத்தியத்தை உணர்ந்து கூறினார். என் தகப்பன் எனக்குச் செய்த இந்தச் செயல், நான் அதை யாருக்கும் செய்யாவிட்டாலும் அதன் வேதனையை நானும் சகிக்க வேண்டும்.

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்த எதிரொலிக்கும் குரல் அப்போஸ்தலனாகிய பவுலின் வாயிலிருந்து வெளிப்பட்டது: “மேலும் நமக்குத் தெரிந்திருக்கிறபடி நியாயப் பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது : நானோ பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு, மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன். எப்படியெனில் நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை ; நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன். இப்படி நான் விரும்பாததைச் செய்கிறவனாயிருக்க நியாயப்பிரமாணம் ஆவிக்குரிய தென்று ஒத்துக்கொள்ளுகிறேனே. ஆதலால் நான் அல்ல, எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. அதெப்படியெனில், என்னிடத்தில் அதாவது என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன். நன்மை செய்வதோ என்னிடத்திலில்லை. ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல் விரும்பாத தீமையையே செய்கிறேன். அந்தப்படி நான் விரும்பாததைதான் செய்தால், நான் அல்ல எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. ஆனபடியால்

நன்மை செய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமையுண் டென்கிற ஒரு பிரமாணத்தைக் காண்கிறேன். உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் மேல் பிரியமாயிருக்கிறேன். ஆகிலும் என் மனதின் பிரமாணத்திற்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது" (ரோமர் 7:14-23)

## பாவத்தின் சம்பளம்

வேதம் கூறுகிறது. பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன் (ரோமர்6:23) ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கு நாளிலே சாகவே சாவாய் ( ஆதி 2;17) மெய்யாகவே ஆதாமும் ஏவாளும் ஆவிக்குரியபடி மரித்து தங்கள் அன்புள்ள சிருஷ்டிகளோடு ஆவிக்குரிய ஐக்கியத்தை இழந்து, அவருடைய சமுகத்திலிருக்கும் விருப்பத்தை இழந்து போனார்கள். அந்த நியாயத்தீர்ப்பு எவ்வளவு பயங்கரமானது! அதை நீ புசிக்கும் நாளிலே சாகவே சாவாய். ஆதாம் அந்தத் தீர்ப்பைக் கேட்டபோது, அவரும் அவருடைய மனைவியும் தங்கள் பாவத்தினிமித்தம் தேவனுடைய முகத்தை விட்டு ஒளித்துக் கொண்டனர். ஆகவே தேவன் ஏசாயா தீர்க்கதரிசி மூலம் சொல்லுகிறார். உங்கள் அக்கிரமங்களே உங்கள் தேவனை விட்டு உங்களைப் பிரிக்கிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு முகத்தை உங்களை விட்டு மறைக்கிறது.



(ஏசாயா 59;2)

தேவன் பூரண சற்குணர் என்றும் அவருடைய நற்குணங்களில் நீதியும் நியாயமும் அடங்கும் என்றும் வேதம் நமக்குப் போதிக்கிறது. அவருடைய நியாயமும் நீதியும் எல்லையற்றவை என்பதால் ஆதாமின் கலகத்துக்கு எதிராக மரணத்தை தண்டனையாக விதித்தார். அவருடைய நியாயமும் நீதியும் மாறாதவைகளாயிருப்பது போல அவருடைய அன்பும் மாறாதது. பாவ நிவிர்த்தியிலும் மன்னிப்பிலும் எல்லையற்ற ஒரு அற்புத அன்பு அது. அவர் இதைத் தம்முடைய வார்த்தைகளிலேயே வெளிப்படுத்துகிறார். அநாதி சிநேகத்தினால் உன்னைச் சிநேகித்தேன். காருண்யத்தினால் உன்னை இழுத்துக் கொண்டேன் (எரேமியா 31;3) ஆகவே, இந்த அபரிமிதமான அன்பு மனிதனுக்கு அனுகூலமாக வந்தது, ஏனெனில் தேவன் சொல்லுகிறார் அவருடைய நாமம் உயர்த்தப்படுவதாக, கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியை விட்டுத் திரும்பி பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன். ( எசே 33:11) புகழ்பெற்ற வழக்கறிஞரான பிரென்டிஸ் ஒரு குற்றவாளிக்காக வாதாடி முடிக்கும் போது கூறினார் : தேவன் தம்முடைய நித்திய ஆலோசனை சங்கத்தில் நீதியையும், சத்தியத்தையும், அன்பையும் பார்த்துக்கேட்டார்.

நான் மனிதனை உண்டாக்கட்டுமா? நீதி சொன்னது : வேண்டாம் ஏனென்றால் அவன் உம்முடைய பிரமாணங்கள் யாவற்றையும் மிதித்து அவைகளை அவமதிப்பான் ; சத்தியம்

சொன்னது : வேண்டாம், அவனை உண்டாக்காதீர், ஏனெனில் அவன் ஆபத்தானவனாகவும், மாயையைப் பின்பற்றுபவனாயும் பொய்களைப் பேசுபவனாகவும் இருப்பான் அன்பு சொன்னது நீர் சொன்னதுபோல அவன் இருப்பான் என்று தெரியும். ஆனால் அவனுடைய குற்றங்கள் மற்றும் துன்மார்க்கம் ஆகியவை இருப்பினும். அவனை மீண்டும் உம்மிடம் கொண்டு வரும்வரை எல்லா இருண்ட பாதைகளிலும் அவனைப் பொறுப்பேற்க நான் முன்வருகிறேன்.

நான் முன்பே சொன்னதுபோல பலிப்பொருட்கள் யாவும் மனுஷனைப் போலவே வயதுள்ளவை. ஆவை யாவும் உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டியைச் சுட்டிக்காட்டுகின்றன. ஆபேல் செலுத்தின இரத்த பலி வரப்போகிறதாயிருந்த மீட்பிற்கு நிழலாட்டமே. தேவனால் ஏவுதல் தரப்பட்டு, தூண்டப்பட்டதும், அவருடைய மனதிற்கு ஏற்றதுமான ஒரு செயலாகும் அது

நோவாவின் காலத்தில் பெருவெள்ளத்தின் தண்ணீர்வற்றின உடனே, நோவாவும், குடும்பத்தினரும் மற்றும் உயிரினங்கள் யாவும் பேழையை விட்டு வெளியேறிய பிறகு நோவா முதலாவது செய்த செயல், ஒரு பலிபீடத்தைக் கட்டி அதின்மேல் சுத்தமான சகல மிருகங்கள் மற்றும் பறவைகளில் சிலவற்றை தகனபலியாக செலுத்தியதுதான். சுகந்த வாசனையைக் கர்த்தர் முகர்ந்தார். ( ஆதியாகமம் 8:20-21)

அதேபோல ஆபிரகாமுக்கு அவருடைய மகனாகிய ஈசாக்குக்குப் பதிலாகப் பலியிட தேவன் கொடுத்த ஆட்டுக்கடா (ஆதி 22:13) மெய்யாகவே கிறிஸ்து எதிர்காலத்தில்



பலியாவதில் தேவன் ஏற்படுத்தின பெரிய மீட்பிற்கு ஓர் அடையாளமாகும்.

இஸ்ரவேல் மக்கள் பலியிட்டு அதன் இரத்தத்தை அவர்களுடைய வீடுகளின் நிலைக்கால்களிலும் மேற்சட்டத்திலும் தெளிக்கும்படி தேவன் நியமித்த பஸ்கா ஆட்டுக்குட்டியும் புதிய ஏற்பாட்டு பஸ்கா ஆட்டுக்குட்டியின் ஒரு மாதிரியே ஆகும். பலியிடப்பட்ட பலிப்பொருள் தேவ ஆட்டுக்குட்டியே ஆகும். இதை அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வாறு கூறுகிறார். நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே ; ஆனபடியால் பழைய புளித்த மாவாகிய துர்க்குணம், பொல்லாப்பு என்பவைகளோடல்ல, துப்புரவு, உண்மை என்னும் புளிப்பில்லா அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம். (1 கொரி 5:7,8)

## ஒரு ஜனத்தின் அனுபவங்கள்

பழைய ஏற்பாட்டின் தேவ மனிதர் மனிதனுடைய பலவீனத்தையும், பாவியைச் சுத்திகரித்து அவனுடைய மனசாட்சியை அமைதிப்படுத்த கட்டளைப் பிரமாணத்தின் இயலாமையையும் கிரகித்திருந்தனர். எபிரெய நிருபத்தில் நாம் வாசிக்கிறோம். செலுத்தப்பட்டு வந்த காணிக்கைகளும் பலிகளும் ஆராதனை செய்தவர்களின் மனச்சாட்சியைச் சுத்தம் செய்யக் கூடாதவைகளாம் ( எபிரெயர் 9:9) வேறு வார்த்தைகளில், பலிகள் சம்பந்தப்பட்ட லேவிய ஊழியமுறை புதிய ஏற்பாட்டு ஆசீர்வாதங்களைச் சுட்டிக்காட்டும் ஒரு நிழலாட்டம் என்பதைத் தவிர அதிகம் ஒன்றுமில்லை.

தீர்க்கதரிசியாகிய தாவீதின் சத்தம் முன்பதாக தேவனிடம் சென்றடைந்தது. பலிகளில் நீர் பிரியப்படு

வதில்லை, அப்படியிருந்தால் அவைகளை நான் செலுத்தி யிருப்பேன் சர்வாங்க தகனபலிகளிலும் நீர் விருப்பம் கொள்கிறதில்லை (சங்கீதம் 51:16)

ஏசாயாவிலும் தேவனுடைய வார்த்தைகள் நமக்கு உண்டு : உங்கள் பலிகளின் திரள் எனக்கு என்னத்திற்கு என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆட்டுக்கடாக்களின் தகனபலிகளும் கொழுத்த மிருகங்களின் நிணமும் எனக்கு அரோசிகமாயிருக்கிறது. காளைகள், ஆட்டுக்குட்டிகள் கடாக்களுடைய இரத்தத்தின் மேல் எனக்குப் பிரியமில்லை நீங்கள் என் சந்நிதியில் வரும்போது, என் பிரகாரங்களை இப்படி மிதிக்க வேண்டுமென்று உங்களிடத்தில் கேட்டது. யார்? இனி வீண் காணிக்கைகளைக் கொண்டு வர வேண்டாம்; தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பாயிருக்கிறது. ... மாதப் பிறப்பையும் ஓய்வு நாளையும் சபைக் கூட்டத்தையும் நான் இனிச் சகிக்கமாட்டேன். (ஏசா 1:11-13)

ஆமோஸ் தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் இந்த அறிக்கையை நாம் காண்கிறோம். உங்கள் பண்டிகைகளைப் பகைத்து வெறுக்கிறேன். உங்கள் தகன பலிகளையும், போஜனபலிகளையும் எனக்குப் படைத்தாலும் நான் அங்கீகரிக்கமாட்டேன். கொழுமையான உங்கள் மிருகங்களின் ஸ்தோத்திரபலிகளையும் நான் நோக்கி ப்பார்க்கமாட்டேன். உன் பாட்டுகளின் இரைச்சலை என்னை விட்டு அகற்று : உன் வீணைகளின் ஓசையை நான் கேட்க மாட்டேன் ; நியாயம் தண்ணீரைப் போலவும் நீதி வற்றாத நதியைப் போலவும் புரண்டு வரக்கடவது. (ஆமாஸ் 5:21-24)

நம்முடைய வார்த்தைகளின் முக்கியமான கருத்து



என்னவெனில், இஸ்ரவேல் மக்களின் வரலாற்றை நாம் உற்று நோக்கும் போது அவர்கள் பலியின் அடிப்படையில் மோசே யோசுவா ஆகியோரது தலைமையில், தேவனிடம் திரும்பினர். இராஜாக்களின் காலத்திலும் பலிகள் முக்கிய இடத்தைப் பெற்றன, ஏனெனில் சர்வாங்க தகனபலிகள் தொடர்ந்து செலுத்தப்பட்டன; குறிப்பாக சாலொமோனின் காலத்தில் பலிபீடத்தின் அக்கினி அவிந்துபோகாத அளவு தொடர்ந்து செலுத்தப்பட்டது. அக்காலத்தில் பல்வேறு பலிகள் செலுத்தப்பட்டன. பலிகள் மற்றம் காணிக்கைகளைச் செலுத்தியே இஸ்ரவேலர் தேவனுக்குக் கீழ்ப்படிந்தனர் என்று நமக்குச் சொல்லத் தோன்றுகிறது. இருப்பினும் எபிரெய நிருபம் இரட்சகரைக் குறித்து அவ்வளவு அழுத்தமாகப் பேசுகிறது; ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது, பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர். சர்வாங்க தகனபலிகளும் பாவநிவாரண பலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர். அப்பொழுது நான் தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன். புஸ்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார் (எபிரெயர் 10:5-9)

தேவன் பாவநிவிர்த்தியை செய்வதென்பது வெறுமனே பாவியான மனுஷனின் மிருக பலியானது இன்னொரு பலியை அடையாளம் காட்டினாலொழிய இயலாத காரியம் என்பதைப் பரிசுத்த ஆவியானவர் குறிப்பாக உறுதிப்படுத்துகிறார்.

“இதோ தேவனே உம்முடைய சித்தம் செய்ய வருகிறேன்”

என்று மாம்சமான வார்த்தை அறிவித்தார். இனியும் மிருக பலியின் மீது கர்த்தர் பிரியப்படுகிறதில்லை என்பதை இவ்விதமாகக் குறிப்பிடுகிறார். அவருடைய பரிசுத்தம் உயர்ந்த ஒரு பலியைக் கோரியது, போதிய மீட்கும் பொருளைக் கோரியது. அதனால் தான் கிறிஸ்து முழு மனுக்குலத்தின் பாவங்களை நிவர்த்தி செய்ய தம்மை ஒப்புக்கொடுத்தார். அவர் இரண்டாவதை நிலை நிறுத்தும்படி முதலாவதை நீக்கிப்போடுகிறார். இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். (எபி 10:9,10)

கிறிஸ்தவ உபதேசத்தில் அஞ்ஞானிகளிடமிருந்து வந்த போதனைகள் நிறைய உண்டு என்று நீங்கள் கூறும் அறிக்கை குறித்து நான் இப்போது பேசட்டும்.

1. நீங்கள் குற்றஞ்சாட்டுகிறபடி பெர்சிய மித்தராஸ் மதம் கி.மு. 70-ல் ரோமிலிருந்து வந்தது, தேவனுக்கும் மனிதனுக்கும் மித்தராஸ் மத்தியஸ்தர் என்பது அதன் முக்கிய கருத்து. புறஜாதிகளின் மதங்களில் தொழுதுகொள்ளப்படும் பொருள் அவர்களை தேவனுக்கு அருகில் கொண்டு வருகிறது என்று நம்பப்படுவதை நீங்கள் கவனிக்கவில்லையா? அப்படியென்றால் குர்ஆனில் ஸுரா 39:3-ஐ நீங்கள் வாசிக்கும்படி கேட்கிறேன், அவனையல்லாமல் வேறு பாதுகாவலர்களைத் தேடுபவர்கள் - இறைவனிடம் நெருங்கி வருவதற்குத்தான் அவர்களை சேவிக்கிறோம் என்பவர்கள் - மாறுபாடுள்ளவர்கள் என்று இறைவன் அவர்களை நியாயந்தீர்ப்பான்.



2. பாகால் குறித்த கற்பனைக்கதை : நான் படித்துப் பார்த்த அநேக பொருளகராதிகளில் பாகால் ஒரு கானானிய கடவுள் என்றும் பாலா அஷேரா அல்லது அஷ்தராஃப் என்பவளின் கணவன் என்றும் கூறப்பட்டுள்ளது. பண்ணை நிலங்களின் கடவுளாகவும், வயல்கள் மற்றும் மிருகங்களில் விருத்தி உண்டாவதவற்கு ஆண்டவன் என்றும் அழைக்கப்பட்டவன். கீழைநாட்டு மக்கள் பாகாலைத் தீவிரமாக வழிபட்டனர். மேலும் அவன் பலிபீடங்களில் நரபலியையும் கூட செலுத்தினர். அழகான காட்சிகளைக் காணக்கூடிய குன்றுகள் மற்றும் மலை உச்சிகளைத் தெரிந்துகொண்டு, அலங்கரிப்புகள் நிறைந்த பெரும் மாளிகைகளைக் கட்டி தங்கள் பெரும் விக்கிரகத்துக்கு அவற்றை அர்ப்பணித்தனர்.

ஆகாப் இராஜாவின் மனைவியான யேசபேல் பாகால் வணக்கத்தை இஸ்ரவேலில் புகுத்தியதால் இஸ்ரவேலர் தேவனுடைய கட்டளைகளை மீறிவாழ்ந்தபோது இந்த பாகால் அவர்களுக்கு பெரும் இடறலாய் மாறியது என்று வேதம் நமக்குச் சொல்கிறது. (1 இராஜாக்கள் 18:17-40)

சுருக்கமாகச் சொல்வேனானால் அக்கால கட்டத்தில் கீழை நாட்டு மக்களிடையே இந்த பாகால் வழிபாடு பரவியிருந்தது. அந்தந்த நாட்டு மக்கள் வெவ்வேறு பெயர்களை உள்ளூர் மொழிக்கு ஏற்ப அவனுக்கு வழங்கியிருந்தனர். ஒவ்வொரு பெயரும் பாகால் என்று துவங்கி அந்த நாட்டின் அல்லது நகரத்தின் பெயரில் முடிந்தது. சில இடங்களில் அவனுடைய குணத்தைக் குறிக்கும் பெயரும் வழங்கியது. உதாரணமாக பாகால் செபூ

– ஈக்களின் கடவுள், அக்டரோன் பட்டணத்துக்கு இவன் கடவுளாக வழங்கப்பட்டவன்.

### பாகால்ஃபகர்

– லெபனான் நாட்டில் சூரியக் கடவுள் என்று அழைக்கப்பட்டான். இவனுக்கு பால்பெக் நகரத்தில் பல கோவில்கள் இருந்தன. அவைகளில் சிறந்தது உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்று என வழங்கப்பட்டதும், கிரேக்கர் கட்டியதுமான சூரியக்கடவுளின் கோவில் என்பதாகும்.

- பாகால் தாமார் – பேரீச்சமரங்களின் கடவுள் பேரீச்சமரங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த விக்கிரகத்தை ஹுதைஃபா என்னும் அரபு கோத்திரத்தார் வணங்கி வந்தனர். ஒருவருஷம் பேரீச்சமரங்கள் பழங்களைக் கொடுக்காதபோது அவர்கள் மிகுந்த கோபமடைந்து அந்த விக்கிரகத்தையே சாப்பிட்டு விட்டனர். இதைக்குறித்து ஒரு கவிஞர் எழுதினார். ஹுதைஃபா தங்களுடைய ஆண்டவனையே பஞ்சமும் குறைபாடும் வந்தபோது சாப்பிட்டுவிட்டனர். தங்கள் ஆண்டவனின் தண்டனை அல்லது அனுகூலம் பற்றி அவர்கள் பயப்படவேயில்லை.

- பாகால் ஜாத் – இது பாகாலின் முகாம்
- பாகால் ஹஸர் – இது நேரத்தின் பாகால்
- பாகால் ஹர்மோன் – ஹர்மோன் மலையின் பாகால்
- பாகால் ஜபூல் – கழிவுப் பொருட்களின் பகால் என்னும் அர்த்தமுள்ள கானானியப் பெயர்
- பாகால் ஷலீஷா – மூன்றாவதின் பாகால் என்பது



பொருள்

- பாகால் ஸபூன் – வடக்கின் பாகால் என்பது பொருள்
- பாகால் மரஹீம் – வெடிகளின் பாகால் என்பது பொருள்
- பாகால்ஃபகர் – அம்மோனியரின் பாகால்
- பாகால் ஹமூன் – மக்களின் பாகால் என்பது பொருள்

இப்பொழுதும் இமாம் அபு ஜக்ரா மற்றும் அஹ்மத் ஷலாபி ஆகிய உங்களை நாங்கள் கேட்க விரும்புவது கிறிஸ்தவ உபதேசம் அல்லது கிறிஸ்துவின் ஜீவியம் ஆகியவற்றுக்கு ஒப்பாக இருக்கிறதென்று இந்தப் பாகால்களில் யாரை உங்கள் மக்களுக்குச் சிபாரிசு செய்து பின்பற்றும்படி செய்வீர்கள்? எங்களைப் பொறுத்தவரை குரானும்கூட சாட்சி கொடுத்துள்ள சரித்திர பூர்வமான வராகிய கிறிஸ்துவையே முன் வைக்கிறோம்.

### புத்தரும் கிறிஸ்துவும்

உங்கள் குற்றச் சாட்டுகளில் ஒன்று புத்தருக்கும் கிறிஸ்துவுக்கும் உள்ள ஒற்றுமைகள் இருபத்தி இரண்டு பாடங்களில் உள்ளன. ... அவர்களுடைய பிறப்பு மற்றும் வாழ்க்கையின் பல சம்பவங்கள் என, ஆனால் இது அதிகம் என்று கருதப்படாவிட்டால் நாங்கள் பலவற்றைக் கூற முடியும் என்பதாகும்.

இந்த இருவருக்கும் இடையில் அவர்களுடைய ஆரம்பகால வாழ்வை ஒப்பீடு செய்யாமல் இந்த அறிக்கையை அப்படியே நான் விடப்போவிதல்லை.

### புத்தரும் அவருடைய செய்தியும்

புத்தரின் பிரதான புத்தகத்தில் இச்சம்பவம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் ஒரு பகுதியை பின்வருமாறு

மொழி பெயர்க்கலாம்.

இராணி மயனா தான் கண்ட விசித்திர கனவை இராஜா தோஷுவாதனாவிடம் சொன்னபோது அவளுக்கு நடுக்கம் ஏற்பட்டது. கி.மு. 568-ல் கோடைக்காலத்தில் ஒரு இரவில் அந்தக் கனவை அவள் கண்டாள். அவள் தன் படுக்கையில் சாய்ந்துகொண்டிருந்தபோது, வெண்ணுடை தரித்த தேவதூதர்கள் அவளருகே வந்து, அவளை அப்படியே எல்லா படுக்கையறை பனிமுட்டுகளோடு தூக்கிச் சென்று, இமயமலைகளில் உயர்ந்த சிகரத்தில் ஒரு பெரிய மரத்தின் நிழலில் வைத்தனர். அவள் தன்னைப் பார்த்த போது, நான்கு இராணிகள் அவளருகே நெருங்கி வந்தனர். சுத்திகரிப்புச் சடங்கை அவளுக்குச் செய்து, அழகான உடைகளை அவளுக்கு அணிவித்து, வாசனைத் திரவியத் தினால் அபிஷேகித்து, அவளை மீண்டும் தூக்கிச்சென்று, முழுவதும் வெள்ளியாளான இடத்திற்கு கொண்டு வந்து, இன்னொரு புனிதப் படுக்கையில் ஒளித்து வைத்தனர். திடீரென்று ஒரு வெள்ளை யானை ஒரு பொன்மலை யிலிருந்து இறங்கி வந்தது. அதன் தும்பிக்கையில் தாமரைச் செடியின் தண்டு இருந்தது. அது இராணியின் படுக்கையை மூன்று முறை சுற்றிவிட்டு, அவளுடைய வலது பக்கத்தைத் தொட்டு பின்பு அவள் வயிற்றுக்குள் புகுந்தது.

இராணி தன் கனவை முழுவதும் சொல்லி முடிக்கு முன்பே இராஜா தன் ஞானிகளில் 64 பேரை அழைத்து வரச் சொல்லியனுப்பினான். அவர்கள் அரண்மனைக்கு வந்து இராணியின் கனவை சொல்லக்கேட்டனர். பின்பு இராஜாவைப் பார்த்து, ஒன்றும் உங்களை கவலையடையச் செய்யத் தேவையில்லை, இராஜாவே! இராணி ஒரு மகனைக்



கர்ப்பந்தரித்திருக்கிறார். அதனால் களிகூறுங்கள். அந்த மகன் இந்த தேச முழுவதற்கும் அரசனாயிருப்பான். அவன் இந்த அரண்மனையில் தங்கினால் அப்படியாகும். மாறாக இதைவிட்டு அவன் நாட்டுப்புறங்களில் சுற்றித்திரிவானானால், இந்த உலகத்திலிருந்து அறியாமையை அகற்றிவிடும் புத்தாவாக அவன் மாறுவான்.

சில நாட்கள் கழிந்தபின்பு ஞானிகளின் வார்த்தைகள் நிறைவேறின. தான் கர்ப்பந்தரித்திருப்பதை உணர்ந்த இராணி ஆச்சரியமான விதமாக தன் வயிற்றில் அந்த ஆண் குழந்தை கால்களை மடக்கி உட்கார்ந்திருப்பதைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. பிறக்கும் நாள் வரை அவன் அப்படியே இருந்தான். பிரசவத்திற்காகத் தன் தாய் வீட்டிற்குச் செல்ல அனுமதிக்கும்படி இராணி மாயனா இராஜாவைக் கேட்டாள், அவள் பிரயாணம் செய்கையில் வழியிலேயே தோபினி என்னுமிடத்திலுள்ள தோட்டத்தில் ஒரு சால் மரத்தின் கீழ் அவளுக்குப் பிரசவவலி உண்டாயிற்று.

இலைகள் நிறைந்த அந்த மரத்தடியில் அவள் கால்களை மடக்கி உட்கார்ந்தாள். வேலைக்காரிகள் அவளைச் சுற்றிலும் ஒரு விசேஷ திரையால் மறைத்துக் கொண்டனர். அவள் எழுந்திருக்க விரும்பி தன் கையை ஒரு இளைக்கு நேராக நீட்டினபோது அது தானாக அருகில் வந்தது.

அவள் எழுந்து நின்றவுடனேயே அந்தக்குழந்தை நான்கு பிரமாணர்கள் கையில் பிடித்திருந்த வெள்ளி நூலால் செய்யப்பட்ட வலையில் விழுந்தது. அது திடீரென்று எழுந்து நின்று ஏழு அடிகள் முன்வந்து, பாடல் போன்ற இனிய குரலில், நான் இவ்வுலகின் ஆண்டவன், இதுதான் என்

கடைசி வாழ்க்கை என்று சத்தமிட்டது.

இந்தப் பெரிய இராஜகுமாரன் பிறந்தசெய்தி சாக்கியர்களின் இராஜ்ய முழுவதும் பரவி, பல பகுதிகளிலிருந்தும் மக்கள் அரசனைப் பாராட்ட வந்தனர்.

## ஆடம்பர வாழ்க்கை

இளவரசன் தன் தந்தையின் அரண்மனையில் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தான். அவன் தானே தனது புத்தகங்கள் ஒன்றில் அதை விவரிக்கிறான, நான் மிகவும் ஆடம்பரமான ஒரு வாழ்க்கையை வாழ்ந்தேன். என் அப்பாவின் அரண்மனையில் அல்லிமலர்கள் பூத்துக்குலுங்கின குளங்கள் பல இருந்தன. ஒன்றில் நீல நிற அல்லி மலர்களும், ஒன்றில் செந்நிற அல்லி மலர்களும், மூன்றாவதில் வெண்ணிற அல்லி மலர்களும் இருந்தன. எல்லாம் நான் அனுபவித்து மகிழ உண்டாக்கப்பட்டிருந்தன.

எனக்கு மூன்று அரண்மனைகள் இருந்தன. ஒன்று குளிர்காலத்துக்கும் , ஒன்று வெயில் காலத்துக்கும் மூன்றாவது மழைக்காலத்துக்குமானது. மழைக்கால அரண்மனையில் நான்கு மாதம் தங்கினேன். என்னைச் சுற்றிலும் பாடும் பெண்களும், அடிமைப் பெண்களும் இருந்தனர். வெயில் காலம் வரும் வரை அங்கேயே இருந்தேன்.

நேர்த்தியான முறையில் திருமணம் செய்வித்து தன் மகனை அலுவல் மிக்கவனாக வைத்துக்கொள்ள தந்தையாகிய இராஜா விரும்பினான். அவனைச் சுற்றி நூற்றுக்கணக்கான அழகிய பெண்களை வைக்கவும் எண்ணினான். அவனுக்கு மனைவியாக அமையும் படி



அவனுடையமாமா கோலி அரசனின் மகள் யொசோதர் தெரிவு செய்யப்பட்டாள். அவள் கவர்ச்சியும் அழகும் உருவானவள்.

## கிறிஸ்துவும் அவருடைய செய்தியும்

ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்னும் தூதன் கலிலேயாவிலுள்ள நாசரேத்தென்னும் ஊரில், தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு என்கிற நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகையினிடத்திற்கு தேவனாலே அனுப்பப்பட்டான். அந்தக் கன்னிகையின் பெயர் மரியாள். அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து, “கிருபை பெற்றவளே வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார் ஸ்திரிகளுக்குள்ளே நீ ஆசிர்வதிக்கப்பட்டவள்” என்றான் அவளோ அவனைக் கண்டு, அவன் வார்த்தையினால் கலங்கி, இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக்கொண்டிருந்தாள். தேவதூதன் அவளை நோக்கி, மரியாளே பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார். உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார் ; அவருடைய இராஜ்யத்துக்கு முடிவிராது” என்றான். அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி “இது எப்படியாகும்? புருஷனை அறியேனே” என்றாள்

தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக : பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம்

உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் எண்ணப்படும். இதோ உனக்கு இனத்தாளாயிருக்கிற எலிசபெத்தும் தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள் ; மலடியென்னப்பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம் தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை என்றான். அதற்கு மரியாள் ; "இதோ நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது" என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய்விட்டான். (லூக்கா 1:26-38)

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு இப்படித்தான் நிகழ்ந்தது. அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்பைத் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டிருந்தார். அவர்கள் கூடிவருமுன்னே, மரியாள் பரிசுத்த ஆவியால் கர்ப்பவதியானார் என்று தெரியவந்தது. அவருடைய புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்தபடியால், வெளியரங்கமாக மரியாளை வெட்கப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் தள்ளிவிட யோசனையாயிருந்தார்.

ஆனால் அவர் இப்படி யோசித்துக் கொண்டிருக்கையில் கர்த்தருடைய தூதன் ஒருவர் சொப்பனத்திலே அவருக்குத் தரிசனமாகி, "தாவீதின் குமாரனாகிய யோசேப்பே உன் மனைவியாகிய மரியாளை சேர்த்துக்கொள்ள பயப்படாதே, ஏனெனில் அவளுடைய கர்ப்பதிலிருப்பது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக ; ஏனெனில் அவர் தமது ஜனங்களைப்



பாவத்திலிருந்து இரட்சிப்பார்".

கர்த்தர் தீர்க்கதரிசியின் மூலமாய் உரைத்தவைகள் நிறைவேறும்படி இவை யாவும் நிகழ்ந்தன இதோ கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவர் இம்மானுவேல் என்று பேரிடுவார்கள். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம் (மத்தேயு 1:18-23)

அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்படவேண்டுமென்று அகுஸ்துராயனால் கட்டளை பிறந்தது. அந்தப்படி குடிமதிப்பு எழுதப்படும் படிக்கு எல்லாரும் தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போனார்கள்.

அப்பொழுது யோசேப்பும் தான் தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாய் இருந்தபடியினாலே, தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டுக் கர்ப்பவதியான மரியாளுடனே குடிமதிப்பெழுதப்படும்படி கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத் ஊரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப் போனான். அவ்விடத்தில் அவர்கள் இருக்கையில் அவளுக்குப் பிரசவகாலம் நேரிட்டது. அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடம் இல்லாதிருந்தபடியினால் பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னனையிலே கிடத்தினாள்.

அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல் வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான். கர்த்தருடைய

மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது. அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவதூதன் அவர்களை நோக்கி பயப்படாதிருங்கள்; இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார் பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான். அந்த நேரமே பரம சேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி, உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள்.

தேவதூதர்கள் அவர்களைவிட்டுப் பரலோகத்துக்குப் போனபின்பு, மேய்ப்பர்கள் ஒருவரையொருவர் நோக்கி நாம் பெத்லகேம் ஊருக்குப் போய்,நடந்ததாக கர்த்தரால் நமக்கு அறிவிக்கப்பட்ட இந்தக் காரியத்தைப் பார்ப்போம் வாருங்கள் என்று சொல்லி

தீவிரமாய் வந்து, மரியாளையும் யோசேப்பையும் முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள்... அந்தப் பிள்ளையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதிகளைப் பிரசித்தம் பண்ணினார்கள். மேய்ப்பராலே தங்களுக்குச் சொல்லப்பட்டதைக் கேட்ட யாவரும் அவைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். மரியாளோ அந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்து சிந்தனை பண்ணினாள். மேய்ப்பர்களும் தங்களுக்குச் சொல்லப்பட்டதின்படியே கேட்டு



கண்ட எல்லாவற்றிற்காகவும் தேவனை மகிமைப்படுத்தி, துதித்துக்கொண்டு, திரும்பிப் போனார்கள்.

பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ணவேண்டிய எட்டாம் நாளிலே, அது கர்ப்பத்தில் உற்பவிக்கிறதற்கு முன்னே தேவதூதனால் சொல்லப்பட்டபடியே அதற்கு இயேசு என்று பேரிட்டார்கள்.

மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படியே அவர்களுடைய சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறின போது, முதற்பேறான எந்த ஆண் பிள்ளையையும் கர்த்தருக்குப் பரிசுத்தமானது எண்ணப்படும் என்று கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி அவரைக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கவும் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் சொல்லியிருக்கிறபடி, ஒரு ஜோடி காட்டுப் புறாவையாவது, இரண்டு புறாக் குஞ்சுகளையாவது பலியாகச் செலுத்தவும் அவரை எருசலேமுக்குக் கொண்டு போனார்கள். (லூக்கா 2;1-24)

## அடிக்குறிப்பு

நீங்கள் கூறியவைகளிலிருந்து பௌத்தர்களும் கிறிஸ்தவர்களும் ( தங்கள் தலைவரின் ) பிறப்பு குறித்து கூறியவைகளில் ஒற்றுமை இருக்கிறது எனக் குற்றஞ்சாட்டுவது தெளிவாகத் தெரிகிறது. உண்மையில் இந்தக் கருத்து ஆதாரமற்றது, கிறிஸ்தவர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர் என்ற நீங்கள் அடிக்கடி ஆவலாய் உபயோகிக்கும் வாக்கியம் கிறிஸ்துவின் பரிசுத்தத்தை மறைப்பதுமின்றி, கிறிஸ்துவானவர் மரித்தோரை எழுப்பினது செவிடரையும், குஷ்டரோகிகளையும் சுகமாக்கினது

அவருடைய முதன்மையான நிலை மற்றும் தேவனோடுள்ள நெருக்கம் ஆகியவற்றில் அவரது மகிமையை அறிவிக்கும் குர்ஆனின் கூற்றுகளுக்கு முராணனது.

அ. புத்தரின் தாய் ஒரு இராணி. நான்கு தூதர்களால் சுமந்து செல்லப்பட்டு இமய மலைகளில் வைக்கப்பட்டபோது ஒரு வெள்ளை யானை அவளுடன் இணைந்ததால் புத்தரைக் கர்ப்பந்தரித்தாள். இயேசுவின் தாயோ ஒரு ஏழை கன்னிப்பெண். கர்த்தருடைய தூதன் தானே அவளைச் சந்தித்து பரிசுத்த ஆவியினால் அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று அவருக்கு இயேசு என்று பேரிடுவாள் என்று கூறினார்.

ஆ) **புத்தரின் இராணி** தாயார் பிரசவித்தபோது அநேகம் வேலையாட்கள் அவளைச் சுற்றி ஒரு மறைவு கட்டி உதவி செய்தனர். அவள் எழுந்து நின்றபோது அவளுடைய குழந்தையை வெள்ளியால் பின்னப்பட்ட வலையில் நான்கு பிராமணர்கள் ஏந்திக்கொண்டனர். **இயேசுவின் கன்னித்தாயோ** பெத்லகேமில் சத்திரத்தில் இடமில்லாமல் ஆடுமாடுகள் அடையும் குகையில் குழந்தையைப் பெற்றெடுத்தாள். மருத்துவச்சிகள் யாரும் உதவி செய்ய இல்லாத நிலையில் குழந்தையை துணிகளில் சுற்றி முன்னணையில் கிடத்தினாள்.

இ) புத்தர் பிறந்தபோது அநேகம் பெரிய மனிதர்கள் வந்து பாராட்டு தெரிவித்தனர். இயேசு பிறந்தபோதோ ஒரு கூட்டம் மேய்ப்பர்களைத் தவிர முழு உலகமும்



உறங்கிக்கொண்டு இருந்தது. கர்த்தருடைய தூதன் அவர் பிறப்பை அறிவித்தபோது அவர்கள் சென்று முன்னணையில் அதைக் கண்டனர்.

ஈ) புத்தரின் தந்தையாகிய அரசர் ஏராளமான காணிக்கை தெய்வங்களுக்குச் செலுத்தப்படும்படி செய்தார். ஆனால் இயேசு தேவாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டபோது, மோசேயின் நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்ட ஏழைகளின் காணிக்கையாகிய இரண்டு புறாக்களை மட்டுமே பலியாக அவருடைய தாயாரால் செலுத்த முடிந்தது.

உ) புத்தர் ஆடம்பரமான அரண்மனைகளில் நூற்றுக் கணக்கான அழகான அடிமைப் பெண்கள் நடுவில் வாழ்ந்தார். இயேசுவோ ஒரு ஏழை தச்சராக வாழ்ந்தார். அவர் தம் ஊழியத்தைத் தொடங்கினபோது ஒரு வேதபாரகன் அவரைப் பார்த்து ; ஆண்டவரே நீர் எங்கு சென்றாலும் உம்மைப் பின்பற்றி வருவேன் என்றான் அதற்கு இயேசு பிரதியுத்தரமாக, "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" என்றார்.

கிறிஸ்தவர்கள் இயேசுவை தேவகுமாரன் என்று சொல்வது தேவதூஷணம் என்னும் உங்கள் குற்றச்சாட்டுக்கு நான் இப்போது பதிலளிக்கிறேன்.

## இவ்விஷயம் குறித்து இஸ்லாமிய கண்ணோட்டம்

நாம் குர்ஆனில் வாசிக்கிறோம், வானத்தையும் பூமியையும் உண்டாக்கியவருக்கு எப்படி ஒரு குமாரன்

இருக்க முடியும் அவருக்கு மனைவியே இல்லையே அவர் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர், அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். (ஸூரா 6:101)

அல் – பைதாவி பின்வருமாறு இதற்கு விளக்கம் அளிக்கிறார். ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறப்பவன் தான் மகன். ஆனால் இறைவன் திருமணம் செய்து கொள்வதில்லை.

இறைவனுக்குத் துணை இல்லாதபடியால் பிள்ளைகளைப் பெறுவது அசாத்தியம், அவர் எந்தத் துணையையும் கொண்டிருக்கவில்லை என்பதே இஸ்லாத்தின் கண்ணோட்டம். இதனால் தான் இயேசு தேவகுமாரன் என்பதை முஸ்லிம்கள் மறுக்கின்றனர். சரீரப்பிரகாரமான பிறப்பு அல்லாமல் வேறுவிதமான குமாரத்துவம் குர்ஆனில் இல்லை.

இந்தச் சிந்தனை ஜம்ஸ் எல் பயன் என்னும் புத்தகத்தில் இமாம் தபரியால் ஆதரிக்கப்படுகிறது.அவர் கூறுவதாவது. (இபின் வஹப், அபி ஜயித் ஆகியோருக்குப் பின்) ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் தான் மகன் இருக்க முடியும். ஒரு துணையைக் கொண்டிருப்பதும் மகனைப் பெறுவதும் இறைவனுக்குத் தூரமாயிருப்பதாக. ஏனெனில் அவர் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர், அவர் உண்டாக்காதது எதுவுமே இல்லையென்றால், அவருக்கு ஒரு மகன் உண்டு என்று நாம் சொல்வது எப்படி?

கிறிஸ்தவ சபையுடன் சேர்ந்துகொண்ட துர்உபதேசக்கூட்டத்தாரின் விளைவாகவே முன்னுள்ள ஸூரா எழுதப்பட்டது என்று சில நம்பகமானவர்கள்



கூறுகின்றனர்.

கன்னி மரியாள் ஒரு தேவதை என்ற துர் உபதேசத்தை அவர்கள் புகுத்த முயற்சித்தனர். அவர்கள் வணங்கி வந்த வேணுவுக்குப் பதிலாக மரியாளைப் புகுத்துவதே அவர்கள் நோக்கம். பெரும் கல்விமானான அஹ்மத் அல் மக்ரிசி தம் நூலாகிய அல் கவுல்அல் இப்ரிசியில் இதைக் குறிப்பிடுகிறார். (பக்கம் 26)

மேலும் இபின் ஹஜம் தனது புத்தகமாகிய அல் மலல்வல் அஹ்வா வல் தஹல் ( பக்கம் 48) இந்த துர்உபதேசம் கண்டனம் செய்வது புரிந்து கொள்ளக் கூடியதே, ஏனென்றால் அது கிறிஸ்தவத்துக்கு அப்பாற்பட்டது.

முஸ்லிம்களின் நூலானது கிறிஸ்துவின் மேன்மையையும் மற்ற தீர்க்கதரிசிகளைவிட அவரது முதன்மையையும் குறித்து முக்கியமான தெளிவான அறிக்கைகளைத் தருகிறது என்பதை குர்ஆன் வாசகர் காணாமல் இருக்க முடியாது. ஆனால் அவருடைய மகிமையான முழுமையையும், அபரிமிதமான மேன்மையையும் வெளிப்படுத்தாமல் குர்ஆன் விட்டுவிடுகிறது. கிறிஸ்துவின் சத்தியத்தை அறிய நாடும் ஒரு நபரை முன்வாசல் வரை அழைத்துவந்து, ஆனால் கதவைத் திறக்காமல் குர்ஆன் விட்டுவிட்டதுபோல இருக்கிறது. தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்து மகிமையின் சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளுக்குப் பிரகாசமாயிராத படிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். (2 கொரிந்தியர் 4:4)

உண்மையில் கிறிஸ்து நித்தியமாக தேவகுமாரனாக

இருப்பதும், அவருடைய அற்புதமான தாழ்மையும் மற்றும் நமது மீட்புக்காக மனுஷகுமாரனாக இறங்கி வந்ததும் தான் அவரைப் பின்பற்றுகிற யாவரும் அனுபவிக்கிற ஆறுதலின் அடிப்படை ஆகும்.

கிறிஸ்து நித்தியமான தேவகுமாரன் என்பதை குர்ஆன் மறுத்து, ஆதாமைப்போல மண்ணினால் தேவன் அவரையும் உண்டாக்கினார் என்று கூறுகிறது. ( ஸுரா 3:60) கிறிஸ்து தேவகுமாரன் என்று கிறிஸ்தவர்கள் கூறுவதைத் தவிர வேறெதையும் முஸ்லிம்கள் அதிகமாக எதிர்ப்பதில்லை. கிறிஸ்தவர்கள் ஒன்றுக்கும் அதிகமான தெய்வங்களை விசுவாசிக்கின்றனர் என்று சில தீவிர முஸ்லிம்கள் சொல்வதுடன் நாம் பல தெய்வ வணக்கக்காரர் என்றும் குற்றஞ்சாட்டுகின்றனர் முஸ்லிம்கள் பரிசுத்த நூல்களைப் படிப்பதைத் தடுக்கும் படியாகவே இப்படிப்பட்ட அறியாமையும் முரட்டாட்டமும் உள்ள பேச்சுகளை சாத்தானே தூண்டிவிடுகிறான்.

நாம் மிக எளிய கிறிஸ்தவரிடம் தேவன் யார்? என்று கேட்டால், "தேவன் ஆவியாயிருக்கிறார், எல்லையற்றவர் நித்தியமானவர், மாறாதவர், ஞானம், வல்லமை, பரிசுத்தம், நீதி, அன்பு மற்றும் சத்தியம் ஆகியவற்றிலும் மாறாதவர் அவர் அதரிசனமானவர். பிரிக்கமுடியாதவர். அல்லது பெருகச் செய்ய முடியாதவர் அவரை அவர் சிருஷ்டிகள் மூலம் வர்ணிக்க முடியாது எந்தச் சிருஷ்டியும் அவருடைய இயைபையோ குணாதிசயங்களையோ கிரகிக்க முடியாது என்று உடனடியாக அவர் சொல்லிவிடுவார்.

"அவரை ( இயேசுவை ) நோக்கிப் பார்த்தவர்கள்



பிரகாசமடைந்தார்கள், அவர்கள் முகங்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை". ஆகையால், நான் சொல்கிற பிதா மற்றும் குமாரன் ஆகிய பதங்களைத்தவறாக வியாக்கியானம் செய்ய வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் சொல்லுகிறபடி பார்க்கும் போது இயற்கையான பிறப்பு என்பதில் பிதா குமாரனுக்கு முந்தினவர் என்றாகிறது. சத்தியத்தின் பெயரால் எந்தக் கிறிஸ்தவனும் தன்னுடைய ஒன்றான ஒரே தேவன், எழுத்தின்படியான ஒரு துணையை அல்லது மாம்சத்தின்படி பிறந்த குமாரனை உடையவராய் இருந்தார் என்று சொல்லவே மாட்டான். ஆனால் நித்தியமான வார்த்தையான குமாரன் பூரண மனிதனாக அவதரித்தார். மரியாளின் வயிற்றில் அவர் பிறந்தாரெனினும் அவருடைய தெய்வீகத்தினின்றும் வேறுபடவில்லை. ஆகவே மரியாளின் மகனாக இயேசு ஒரு தற்காலிக சரீரத்தை உடையவராயிருந்தார். இருப்பினும் தேவனுடைய வார்த்தை என்ற முறையில் அவர் ஆதிமுதலாயிருக்கிறவர், நித்தியமானவர் தமது தெய்வீக இயல்பின்படி அற்புதங்களைச் செய்கிறவர்.

விசித்திரமான ஒரு காரியம் என்னவெனில், குர்ஆனும் பாரம்பரிய நூல்களும் கிறிஸ்துவின் மேன்மை, மாற்றமில்லாமை மற்றும் அற்புதம் செய்யும் வல்லமை ஆகியவற்றிற்குச் சாட்சி பகர்ந்தாலும், அவருடைய இயல்பு குறித்த விஷயத்தில் கிறிஸ்துவுக்கும் மற்ற தீர்க்கதரிசிகளுக்கும் உள்ள வித்தியாசத்தை முஸ்லிம்கள் காணத்தவறுகின்றனர். அதற்கு மாறாக அவருடைய நித்தியத்துவத்தை பலவந்தமாய் மறுக்கின்றனர் என்பதைக்

காண்கிறோம். அவர்களுடைய பாரம்பரிய நூல்களில் முஹம்மதுவின் சிருஷ்டிப்புக்கு முந்தைய ஒளி குறித்த கதைகள் நிறையுவுள்ளன. (எட்டின் எல்ஹயாபியின் இன்சான் அல் லியூன் என்னும் நூல் காண்க) இருப்பினும் நம் மனதில் குழப்பம் உண்டாக்கும் காரணங்களால் முஹம்மது காலத்திற்கு அப்பாற்பட்ட நிலை குறித்து தானே உரிமைகோராத தன்மையை இஸ்லாம் அவருக்கு வழங்குவதுடன், இயேசு பல சான்றுகளுடன் உரிமை கோரும் அத்தன்மையை, அவருக்கு இல்லை என்று மறுத்துக்கொண்டே இருக்கிறது.

முனைவர் ஜ்வெமர் தமது ஈசா அல்லது இயேசு என்னும் நூலில் எகிப்து, இந்தியா மற்றும் இதர முஸ்லிம் நாடுகளில் வெளியிடப்படும் இஸ்லாமிய நூல்களை நீங்கள் வாசித்துப்பார்ப்பீர்களானால், கிறிஸ்துவின் தெய்வீகம் மற்றும் மனுக்குலத்திற்காக அவர் செய்த மீட்பின் கிரியை ஆகியவற்றைவிட அதிகமாகக் குறைகூறப்படும் அல்லது எதிர்க்கப்படும் விஷயத்தை நீங்கள் காண இயலாது என்று கூறுகிறார். கிறிஸ்தவர்கள் அவர் தேவன் என்றும் அதே நேரம் மனிதனாகவும், தீர்க்கதரிசியாகவும், ஆசாரியனாகவும், இராஜாவாகவும் இருந்தார் என விசுவாசிக்கும் அதேவேளை முஸ்லிம்களுக்கு அவர் ஒரு வெறும் மனிதர் மற்றும் தீர்க்கதரிசி, அதற்கு மேல் ஒன்றுமில்லை. இராஜபதவி, ஆசாரியபதவி என்பவை இஸ்லாமியர்களுக்கு புரியாதவை. இஸ்லாத்தில் ஆசாரியத்துவம் இல்லையாதலால் பாவநிவிர்த்தியின் அருமை அவர்களுக்குத் தெரியாது. இதனால் தான் கிறிஸ்து நிறைவேற்றிய இந்த அடிப்படையான கிரியை முஸ்லிம் மனதிற்கு எட்டவில்லை.



முஹம்மதுவின் சிந்தனைகளிலும் இக்கருத்துகள் இருந்ததில்லை என்று முனைவர் சயுஸ் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறுகிறார். காரியத்தின் சாராம்சம் என்னவெனில், முஹம்மதுவுக்குப் பாவவுணர்வு இருந்ததில்லை, அதனால் பாவமீட்பு அவசியமென்று அவர் எண்ணம் கொள்ளவில்லை. இதன் விளைவாக எல்லாக் காலங்களிலும் அவரைப் பின்பற்றுபவர்கள் இந்த கருத்தை எதிர்த்துவந்துள்ளனர். உலகெங்கிலும் மற்ற மதங்களை விட முஸ்லிம்களிடையே இரட்சிக்கப்பட்டு கிறிஸ்தவ விசுவாசத்தில் வருபவர்கள் குறைவாயிருப்பதற்கு இதுவே காரணம். ஒரு கிறிஸ்தவனாவதற்கு ஒரு கிறிஸ்தவனுக்கும் ஒரு முஸ்லிமுக்கும் இடையே கிறிஸ்தவனின் பாவவுணர்வுதான் திடமான ஒரு தடைச்சுவராக இருக்கிறது.

கிறிஸ்துவாக மாறி முஸ்லிம்கள் நடுவில் பணிபுரியும் ஓர் ஊழியர் தாமே கூறுகிறார். இறைவன் இரக்கக்குணம் மிகுந்தவர். மீட்பு இல்லாமலேயே பாவங்களை மன்னிக்க விருப்பமுள்ளவர், நீதியை விட்டுக்கொடுக்காதவர் என்று நம்புவதானது முஸ்லிம்களிடையே ஊழியம் வெற்றி பெறாமைக்கு முக்கிய காரணம். இதனால் ஓர் இரட்சகர் தேவை என்பதை அவர்கள் காணத்தவறுகின்றனர்.

நீங்கள் குறிப்பிட்ட வீடுகட்டுகிறவர்களால்... தள்ளப்பட்ட கல் குறித்து நாங்கள் சொல்ல விரும்புவது, வேதாகமத்தை யாரும் பரிசுத்த ஆவியானவரின் உதவியில்லாமல் வியாக்கியானம் செய்ய முடியாது என்பது பரிசுத்த வேதாகமத்தின் குணங்களில் ஒன்று. இந்த நல்ல புத்தகத்தில் உள்ளவைகளைப் புரிந்து கொள்ள அவரே

விசுவாசிக்கு உதவி செய்கிறார். பெரிய விசுவாச வீரனாகிய அப்போஸ்தலனாகிய பவுல் அதை இவ்வாறு குறிப்பிடுகிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான் நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு, தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல் பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம். (1 கொரிந்தியர் 2:11-13)

ஆகவே தள்ளப்பட்ட கல் சுவிசேஷத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல இயேசு கிறிஸ்துவே. அவர் உலகத்திலே இருந்தார். "உலகம் அவரால் உண்டாக்கப்பட்டது என்றாலும் உலகம் அவரை அறிந்து கொள்ளவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாகி அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்" (யோவான் 1;10-12)

இந்தச் சத்தியத்தைச் சாட்சியாகச் சொல்லும்படியாக பவுல் கூறுகிறார். "ஆகையால் இனி நீங்கள் அந்நியரும் பரதேசிகளுமாயிராமல் தேவனுடைய நகரத்தாரும் ஒரே வீட்டாருமாயிருக்கிறீர்கள் அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள்



என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர் களுமாயிருக்கிறீர்கள் அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார்". (எபேசியர் 2;19-20)

லூக்கா சுவிசேஷத்தில் 20:9-19 -ல் நாம் வாசிக்கிறோம். பின்பு அவர் ஜனங்களுக்குச் சொல்லத் தொடங்கின உவமையாவது: ஒரு மனுஷன் ஒரு திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி, அதைத் தோட்டக்காரருக்குக் குத்தகையாக விட்டு, நெடுநாளாகப் புறத்தேசத்துக்குப் போயிருந்தான். அந்தத் திராட்சத்தோட்டக்காரர் திராட்சத்தோட்டத்தின் கனிகளில் தன் பாகத்தை கொடுத்தனுப்பும்படி பருவகாலத்திலே அவர்களிடத்தில் ஒரு ஊழியக்காரனை அனுப்பினான். அந்தத் தோட்டத்க்காரர் அவனை அடித்து, வெறுமையாய் அனுப்பிவிட்டார்கள். பின்பு அவன் வேறொரு ஊழியக்காரனை அனுப்பினான். அவனையும் அவர்கள் அடித்து, அவமானப்படுத்தி வெறுமையாய் அனுப்பி விட்டார்கள். அவன் மூன்றாந்தரமும் ஒரு ஊழியக்காரனை அனுப்பினான். அவனையும் அவர்கள் காயப்படுத்தித் துரத்திவிட்டார்கள்.

அப்பொழுது திராட்சத்தோட்டத்தின் எஜமான். நான் என்ன செய்யலாம். எனக்குப் பிரியமான குமாரனை அனுப்பினால் அவனையாகிலும் கண்டு அஞ்சுவார்கள் என்று சொல்லி அவனை அனுப்பினான்.

தோட்டக்காரர் அவனைக் கண்டபோது, இவன் சுதந்தரவாளி, சுதந்தரம் நம்முடையதாகும்படிக்கு இவனைக் கொல்லுவோம் வாருங்கள் என்று சொல்லி அவனைத் திராட்சத்தோட்டத்திற்குப் புறம்பே தள்ளிக்

கொன்றுபோட்டார்கள்.

இப்படியிருக்க திராட்சத்தோட்டத்தின் எஜமான் அவர்களை என்ன செய்வான்? அவன் வந்து அந்தத் தோட்டக்காரரைச் சங்கரித்து, திராட்சத் தோட்டத்தை வேறு தோட்டக்காரரிடத்தில் கொடுப்பான்".

அவர்கள் அதைக்கேட்டு அப்படியாகாதிருப்பதாக என்றார்கள். அப்பொழுது அவர் அவர்களைப் பார்த்து, "வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று. என்று எழுதியிருக்கிற வேதவாக்கியத்தின் கருத்தென்ன? அந்தக் கல்லின் மேல் விழுகிறவன் எவனோ அவன் நொறுங்கிப் போவான். அது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும்.

பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் தங்களைக் குறித்து இந்த உவமையைச் சொன்னார் என்று அறிந்து, அந்நேரத்திலே அவரைப் பிடிக்க வகைதேடியும், ஜனங்களுக்குப் பயந்திருந்தார்கள்.

இந்தக் கல் தம்மையே குறிக்கிறது. முஹம்மதுவை அல்ல என்று இயேசு தெளிவாகக் காண்பித்தார். ஏனெனில் அவர் சொன்னதைக் கேட்ட பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவரைப் பிடிக்க வகைதேடினார்கள்.

தேவனுடைய இராஜ்யம் உங்களைவிட்டு எடுக்கப்படும் என்ற உங்கள் அறிக்கை குறித்து மத்தேயு சுவிசேஷம் நமக்குச் சொல்கிறது இயேசு வழக்கத்தின்படியே தேவாலயத்தில் வந்து உபதேசம் பண்ணுகையில் பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அவரிடத்தில் வந்து ; "நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இந்த



அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்?" என்று கேட்டார்கள் (மத்தேயு 21:23). அவர்களுக்குப் பதிலாக நாம் லூக்கா 20 ம் அதிகாரத்தில் நாம் காண்கிற உவமையைச் சொன்னார். அந்த உவமையை பின்வருமாறு முடித்தார். அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது... ஆகையால் தேவனுடைய இராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும். (மத்தேயு 21:33-43)

உங்களுக்கு ஆதரவாக இருக்கும்படி ஒரு வசனத்தை அதன் வேதாகம பொருள் அமைவிலிருந்து மாற்ற நினைப்பதற்கு முன், இந்த உவமைக்கு இணையான வசனங்கள் வேதாகமத்தில் வேறு இடத்தில் உண்டு என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். ஏசாயா தீர்க்கதரிசி எழுதுகிறார். "இப்பொழுது நான் என் நேசரிடத்தில் அவருடைய திராட்சத் தோட்டத்தைக் குறித்து என் நேசருக்கேற்ற ஒரு பாட்டைப் பாடுவேன். என் நேசருக்கு மகா செழிப்பான மேட்டிலே ஒரு திராட்சத்தோட்டம் உண்டு. அவர் அதை வேலியடைத்து அதிலுள்ள கற்களைப் பொறுக்கி, அதிலே நற்குல திராட்சத் செடிகளை நட்டு, அதின் நடுவில் ஒரு கோபுரத்தைக் கட்டி, அதில் ஆலையையும் உண்டு பண்ணி, அது நல்ல திராட்சப் பழங்களைத் தருமென்று காத்திருந்தார். அதுவோ கசப்பான பழங்களைத் தந்தது.

எருசலேமின் குடிகளே யூதாவின் மனுஷரே, எனக்கும் என் திராட்சத் தோட்டத்துக்கும் நியாயந்தீருங்கள். நான் என் திராட்சத்தோட்டத்திற்காக செய்யாத எந்த வேலையை அதற்கு இனிச் செய்யலாம்? அது நல்ல திராட்சப் பழங்களைத் தருமென்று நான் காத்திருக்க அது கசப்பான பழங்களைத்

தந்ததென்ன? இப்போதும் நான் என் திராட்சத்தோட்டத்துக்குச் செய்வதை உங்களுக்கு அறிவிப்பேன். அதின் வேலியை எடுத்துப் போடுவேன். அது மேய்ந்து போடப்படும். அதின் அடைப்பைத் தகர்ப்பேன். அது மிதியுண்டு போம். அதைப் பாழாக்கி விடுவேன்; அதின் கிளை நறுக்கப்படாமலும், களை கொத்தி எடுக்கப்படாமலும் போவதினால் முட்செடியும் நெரிஞ்சிலும் முளைக்கும், அதின் மேல் மழை பெய்யாத படிக்கு மேகங்களுக்கும் கட்டளையிடுவேன் என்கிறார். சேனைகளின் கர்த்தருடைய திராட்சத்தோட்டம் இஸ்ரவேலின் வம்சமே; அவருடைய மனமகிழ்ச்சியின் நாற்று யூதாவின் மனுஷரே (ஏசாயா 5:1-7) (சங்கீதம் 80:4-9ம்காண்க) இந்த உவமையில் இயேசு தம்மைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள், முக்கியமாக பிரதான ஆசாரியரும் மூப்பரும் அவர்களுடைய மறை நூல்களிலிருந்தே ஆதாரத்தை அவர்களுக்குக் காண்பிக்க விரும்பி, தேவன் பெரிய தீர்க்கதரிசியாகிய ஏசாயாவுக்கு வெளிப்படுத்தின இதைக் குறிப்பிட்டார்.

கிறிஸ்துவானவர் இந்த உவமையின் மீது கருத்து கூறும் விதமாக அது கர்த்தராலே ஆயிற்று. அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. ( சங்கீதம் 118:23) என்றார். இதனுடைய பொருள் என்னவெனில் இந்த விஷயம் கேட்பவர்கள் எல்லாரையும் குழப்பத்திலாக்கிற்று: ஏனெனில் பெரும்பாலான யூதர்கள் எதிர்பார்த்ததற்கு அது முரணாக அமைந்துவிட்டது. தேவனுடைய ஆலோசனையில் மீட்பு இருந்திராவிட்டால் அது சம்பவித்திருக்காது. மீட்புடன் சம்பந்தப்பட்ட எல்லா சம்பவங்களும் மிக விநோதமானவைகள் என்பதில் சந்தேகமில்லை. தேவன்



தமது ஒரே பேறான குமாரனை மீட்பராக அனுப்பியது. நித்தியமான வார்த்தை மாம்சமானது, தெரிந்து கொள்ளப்பட்டவர்களால் புறக்கணிக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டது. இதைவிட அதிக விநோதமானது வேறு ஏதாகிலும் உண்டா? இயேசு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தது, சபையானது நிறுவப்பட்டிருக்கும் கல்லாக மாறியது இதைவிட அதிக விநோதமானது வேறு ஏதும் உண்டா? இயேசு அந்த உவமையை பின்வரும் தீர்ப்பைக் கூறி முடித்தார். ஆகையால் தேவனுடைய இராஜ்யம் உங்களிடத்திலிருந்து எடுக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைக் கொடுக்கிற ஜனங்களுக்குத் தரப்படும்.

திராட்சத்தோட்டம் தேவனுடைய இராஜ்யம் என்று அர்த்தப்படுத்தியபோது, அந்த உவமையைக் கொண்டு என்ன பொருள் கூற விழைந்தார் என்று விளக்கும்படி இயேசு கிறிஸ்து இந்த வசனத்தைப் பயன்படுத்தினார். கிருபையின் வழிமுறைகளும் தேவ ஜனங்களின் ஆசீர்வாதங்களும் யூதர்களிடமிருந்து நீக்கப்பட்டு, இயேசுவை தங்கள் இரட்சகராகவும், மீட்பராகவும் ஏற்றுக்கொள்ளும் சகல கோத்திரத்தார், மொழியினர், மக்கள் மற்றும் நாட்டினருக்கு (வெளி 5:9) கொடுக்கப்படும் என்று அவர்களிடம் கூறினார்.

முன்னதாக யூதர்களை இயேசு இவ்வாறு எச்சரித்திருந்தார். அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோக இராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள், ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத்தேயு 8:11,12)

## தேற்றரவாளன் ( பேரக்ளீட் ) என்பவர் யார்?

தேற்றரவாளன் ( பேரக்ளீட் ) என்னும் வார்த்தை பலகாலமாய் சர்ச்சைக்குரிய விஷயமாய் இருந்து வருகிறது. கிரேக்க மொழியில் பேரக்ளிடோஸ் என்னும் வார்த்தை சிரியாக் மொழியில் மன்ஹமனா என்பதற்குச் சமம் என்று சிலர் கூறியுள்ளனர். இவ்வார்த்தை முஹம்மது என்று பொருள் தரும். இபின் ஐசக் எழுதிய இறைதூதரின் வாழ்க்கை என்னும் நூலிலிருந்து இபின் ஹிஷாம் அவர்களால் மேற்கோள் காட்டப்பட்ட இந்த வியாக்கியானம் விரைவில் அநேகம் முஸ்லிம்களிடையில் பரவிற்று. இவ்விஷயத்தின் மீது ஒரு மதரீதியான சர்ச்சையை உருவாக்க நான் விரும்பவில்லை. சத்திய ஆவியாகிய தேற்றரவாளன் வரும் போது, அவர் என்னைக் குறித்து சாட்சி கொடுப்பார்.

நான்காவதாக யோவான் 16:7ல் அவர் கூறுகிறார், "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும். நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்".

இந்த வசனப்பகுதிகளை தியானிக்கும் எவரும் அவைகளை புதிய ஏற்பாட்டின் வேறு வசனங்களில் பரிசுத்த ஆவியானவர் மற்றும் அவருடைய கிரியை குறித்து சொல்லப்பட்டிருப்பவைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நிச்சயமாகவே பேரக்ளிட்டோஸ் என்னும் வார்த்தை முஹம்மது என்ற அர்த்தமுள்ளது என்று சொல்பவர்களை ஆதரிக்கமாட்டார்கள். அதன் காரணங்கள் வருமாறு

அ) ஏனென்றால், கிறிஸ்துதாமே பேரக்கிளிடோஸ் என்னும்



வார்த்தையை வெவ்வேறு மாறுபட்ட குணாதிசயங்களுடன் ஒப்பிடுகிறார். சத்திய ஆவி பரிசுத்த ஆவி, பிதாவிடத்திலிருந்து அனுப்பப்பட்ட ஆவி இந்தக் குணாதிசயங்கள் முஹம்மதுவுக்குப் பொருந்தாது. ஏனெனில், பேரக்ளிட்டோஸ் ஒரு தெய்வீக ஆவி, இறைதூதர் முஹம்மதுவோ சாதாரண மனிதர்.

ஆ) பேரக்ளிட்டோஸ் என்றைக்கும் இயேசுவின் சீஷர்களிடத்தில் தங்கி அவர்களுக்குள் வாழுவார் என்று அவர் கூறினார். முஹம்மதுவோ இயேசுவுக்கு ஆறு நூற்றாண்டுகள் கழித்து பிறந்தபடியால் அவருடைய சீஷர்களுடன் இருப்பார் என்ற நிலைக்கு இடமேயில்லை.

இ) தேற்றரவாளனின் ( பேரக்ளிடோஸின் இன்னொரு பெயர்) குணாதிசயங்களில் ஒன்று இந்த உலகம் அவரைக் காணமுடியாது என்பதாகும். முஹம்மதுவோ மனிதரால் காணப்பட்டார், அவர்களோடு உட்கார்ந்தார், அவர்கள் சொல்வதைக் கேட்டார், அவர்களோடு பேசினார்.

ஈ) தேற்றரவாளன் கிறிஸ்துவின் தூதனாவார். இந்த உண்மையை முஸ்லிம்கள் முஹம்மதுவைப் பொருத்தமட்டில் ஏற்றுக்கொள்வதில்லை, ஏனெனில் முஹம்மது கிறிஸ்துவிலும் பெரியவர் என்று அவர்கள் கூறுகின்றனர்.

உ) தேற்றரவாளன் சீஷர்களுக்குப் போதித்து அவர்களைச் சகல சத்தியத்திலும் நடத்துகிறார். இது முஹம்மதுவால் கூடாதகாரியம், ஏனெனில், இவர்

பிறப்பில் அவர்களுக்குப் பல நூற்றாண்டுகள் பிந்தினவர்.

ஊ) பேரக்கிளிடோஸின் குணாதிசயங்களும் கிரியைகளும் கண்களால் காணப்படும், கரங்களால் தொட்டுணரப்படும், மாம்சமும் இரத்தமும் உடைய எந்தவொரு நபருக்கும் பொருந்தாது. ஏனெனில் அவர் ஆவியாயிருக்கிறார். உண்மையில் தேற்றரவாளனாகிய ஆவியானவரின் வருகை முஸ்லிம்களின் காலம் துவங்குவதற்கு ஆறு நூற்றாண்டுகள் முன்பு நிகழ்ந்தது.

எ) பேரக்ளிடோஸ் ஒரு தெய்வீக ஆவி, மனிதன் அல்ல என்பதை உறுதி செய்யும் பல பெயர்கள் சுவிசேஷங்களில் உள்ளன. தேற்றரவாளன், வல்லமையின் ஆவி, உன்னதத்தின் வல்லமை, கண்டித்து உணர்த்துபவர், பரிசுத்த தேவனின் ஆவி, விசுவாசி ஜெபிக்கும்படி கற்றுத்தரும் ஆவி, பரிசுத்த ஆவி என்றெல்லாம் அவர் அழைக்கப்படுகிறார்.

ஏ) பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறும் வரை எருசலேமை விட்டுப் போகவேண்டாம் என்று இயேசு தம் சீஷர்களிடம் தாம் பரமேறுவதற்கு முன் சொன்னார். இந்த ஆசீர்வதிக்கப்பட்ட ஆவியானவர் மெய்யாகவே பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் மீது பொழியப்பட்டது (அப்போஸ்தலர் 2:4,5) இந்த பொழிவு யோவேல் 2:28க்கு உள்ள தீர்க்கதரிசனத்தை நிறைவு செய்தது. அந்நிய மொழிகளில் பேசக்கூடிய அற்புதத்தை அடையாளமாகக் கொண்டிருந்தது. இவை யாவும் இப்பெயர் சிறிதேனும் முஹம்மதுவின்



செய்தியுடன் சம்பந்தப்படவில்லை என்பதை நிரூபிக்கின்றன.

## கிறிஸ்துவின் தெய்வீக குமாரத்துவம்

இறுதியாக கிறிஸ்து தேவ குமாரனல்ல, அவருக்கு தெய்வீகத் தன்மை கிடையாது என்ற உங்கள் கூற்றுக்கு பதிலளிக்கிறேன்.

இயேசு தம்முடைய தெய்வீகத்தன்மையை யூதர்களுக்கு அறிவிக்கும் முறையே நம்பகத்தன்மை உடையதாயிருக்கிறது என்று வேத அறிஞர்கள் ஒருமனதாக ஒப்புக்கொள்கின்றனர். உண்மையில் எவரும் புதிய ஏற்பாட்டில் அடங்கியுள்ளவைகளை சாதாரணமாகப் பார்த்தாலே, தீவிர ஏக இறைக் கொள்கை உடைய யூதச் சூழ்நிலையில் எப்படி விசுவாசம் உருவாகியது என்ற பிரச்சனைக்குத் தீர்வுகாண உதவும் அவற்றின் உண்மைத் தன்மையை ஒப்புக்கொள்ளும்படி வழிநடத்தப்படுவார். இயேசு பயன்படுத்திய முறையானது இந்த ஆழ்ந்த சத்தியத்தை சிறிதுசிறிதாக வெளிப்படுத்துகிறது. கேட்பவர்களுடைய மனநிலைக்குப் பொருந்தும்படி எச்சரிக்கையுடனும் தனித்துவமிக்க தேவ ஞானத்துடனும் இதைச் செயல்படுத்துகிறது.

அப்போஸ்தல நடபடிகளில் பதிவு செய்யப்பட்டுள்ள இரத்த சாட்சியாகிய ஸ்தேவானின் மரணத்துக்கடுத்த சம்பவங்களை ஆழ்ந்து நோக்குங்கால் யூத சமுதாயத்தின் மனோநிலையையும் ஏக இறைக்கொள்கையில் எவ்வளவு தீவிர அர்ப்பணிப்பு உடையவர்களாய் இருந்தனர் என்பதையும் நாம் புரிந்து கொள்ள முடியும். ஸ்தேவான் கூறுவதை எல்லாம்

பொறுமையாய்க் கேட்டுக்கொண்டிருந்த ஆலோசனைச் சங்கத்தினர், உங்கள் பிதாக்கள் தீர்க்கதரிசிகளில் யாரைக் கொலை செய்யாமல் விட்டனர்? நீதியுள்ளவருடைய வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலை செய்தனர். இப்பொழுது நீங்கள் அந்த நீதிபரரைக் காட்டிக் கொடுத்து கொலை செய்தீர்கள்... என்று அவர் சொன்ன போதோ அவர்கள் மூர்க்கமடைந்து, அவருக்கு விரோதமாகப் பற்களைக கடித்தனர். ( அவர்களுடைய கோபம் அந்த அளவுக்கு இருந்தது). ஆனால், அவர் "இதோ வானம் திறந்திருக்கிறதையும் மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காணகிறேன்... என்ற போதோ அவர்கள் ஒருமனப்பட்டு அவர்மேல் பாய்ந்து பட்டணத்துக்கு வெளியே இழுத்துக்கொண்டு போய் அவரைக் கல்லெறிந்தார்கள். (அப்போஸ்தலர் 7:52-58)

இயேசு தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறார் என்று ஸ்தேவான் சொன்ன வார்த்தைகளினிமித்தமே அவரை அவர்கள் கொலை செய்தனர். இதை அவர்கள் தேவ தூஷணமாக எண்ணினர். பிதாவின் மகிமைக்கு இயேசுவைச் சமமாக்குவதே அதன் பொருள் எனக் கருதினர். இயேசு தம்முடைய தெய்வீகத் தன்மையை சிறிது சிறிதாக அறிமுகம் செய்யாமல், உடனடியாகவே தாம் தேவனுடைய ஒரே பேறான குமாரன் எனவும், பிதாவுக்குச் சமமானவர், அதே குணாதிசயங்களை உடையவர் எனவும் துவக்கத்திலிருந்தே சொல்லியிருப்பாரானால் தமது ஊழியத்தில் மூன்று வருடங்கள் நீடித்திருந்திருக்கவே மாட்டார். இருப்பினும் அவருடைய முற்போக்கான அணுகுமுறை தமது தூதைச் சொல்லவும், தாம் மேசியாவாக அவதரித்த இரகசியத்தை,



தேவகுமாரன், இவ்வுலகத்தின் இரட்சகர் என்ற உண்மையை வெளிப்படுத்தவும் உதவிற்று. தமது ஆளத்துவத்தின் சாராம்சத்தைச் சுட்டிக்காட்டி தமது தெய்வீகத் தன்மையை ஜனங்களின் மனதில் கிரகிக்கச் செய்யும் வண்ணம் அவர் செயல்பட்டார். இவ்விஷயம் குறித்து சுவிசேஷங்கள் பதிவு செய்துள்ள மிக முக்கியமான வசனபகுதிகள் வருமாறு;

1. இயேசுவின் மலைப் பிரசங்கத்தை நோக்கும்போது தெய்வீகப் பிரமாணிகராகிய இஸ்ரவேலின் தேவனுடைய அதே அதிகாரத்துடன் அவர் போதித்தார். அவர் சொல்வதைக் கேளுங்கள். கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலை செய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும் பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான், தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத் தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான், மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான் (மத்தேயு 5:21,22) விபரசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்திலே அவனோடே விபசாரஞ்செய்தாயிற்று (மத்தேயு 5:28) அன்றியும் பொய் ஆணையிடாமல் உன் ஆணைகளைக் கர்த்தர்

முன்னிலையாய்ச் செலுத்துவாயாக என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் : சத்தியமே செய்ய வேண்டாம் (மத்தேயு 5:33-34) கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல் என்று உரைக்கப்பட்டதைக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம் ; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு (மத்தேயு 5:38-39) உனக்கு அடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் (மத்தேயு 5:43,44)

"ஆனால் நான்," என்று சொல்லவும், தேவனிடத்திலிருந்து மோசே பெற்ற தெய்வீகப் பிரமாணத்துடன் தாம் சொல்லியவற்றைச் சேர்க்கவும் அதிகாரம் உடையவர் யார்?

லூக்கா 6:22 ல் இயேசு சொன்னார், "மனுஷகுமாரன் நிமித்தமாக ஜனங்கள் உங்களைப் பகைத்து, உங்களைப் புறம்பாக்கி, உங்களை நிந்தித்து, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும் போது நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள், இதை அவர் மத்தேயு 5:10ல் உள்ள நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் ; பரலோக இராஜ்யம் அவர்களுடையது



எனும் வசனத்துடன் ஒப்பிட்டிருக்கிறார். அவர் உபதேசத்தைக் கேட்பவர்கள் புரிந்துள்ளபடி "நீதி" என்னும் வார்த்தை கர்த்தருடைய பிரமாணம் அல்லது கர்த்தர் தாமே இப்படி இதைக் கூறியதால் இயேசு தம்மை கர்த்தராகிய தேவனுக்குச் சமமாக்குகிறார்.

இது மாத்திரமல்ல, "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல" (மத்தேயு 10:37,38) என்று சொல்லி தம்மிடம் முழுமையான அன்பும் முழுமையான அர்ப்பணிப்பும் காட்டப்படவேண்டும் எனக்கேட்கிறார்.

அவர் பேசின விதம் யூதர்களுக்கு தோராவில் உள்ள கட்டளையை நினைப்பூட்டியது. உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழுப் பலத்தோடும் அன்பு கூருவாயாக. எனவே, தம்மீதும் முழுமையான அன்பு காண்பிக்கப்பட வேண்டும் என்று கேட்பதனால் அப்படிப்பட்ட பயபக்திக்கு உரியவரான இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்குச் சமமாக தம்மை ஆக்குகிறார். அன்றியும் பிதாவைக் கனம்பண்ணுவதுபோல எல்லாரும் குமாரனைக் கனம் பண்ணும்படிக்கு... குமாரனைக் கனம் பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம் பண்ணாதவனா யிருக்கிறார். (யோவான் 5:22,23) எனக் கூறுவதன் மூலம் இந்தச் சத்தியத்தை அவர் உறுதி செய்கிறார். இதன் அர்த்தம்

என்னவெனில், பிதாவுக்குத் தரப்படும் கனத்தையே குமாரனுக்கும் மனிதர் தரவேண்டும் என்று தெய்வீக சித்தம் கோருகிறது. இதனால், பரலோக வாசிகள் செய்வதுபோல (வெளிப்படுத்தல் 5:12) தேவனுக்குச் செய்ய வேண்டிய அன்பு கூறுதல், கனம் பண்ணுதல் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றை நாம் குமாரனுக்கும் செய்யத்தக்கதாக, பிதாவுக்குச் சமமானவராய் அவர் ஆகிறார்.

மேலும், "கடைசி நாளில் உயிரோடிருக்கிறவர் களையும் மரித்தோரையும் நியாயந்தீர்ப்பதாக இயேசு கூறுகிறார். வலுவாய்த் தொனிக்கும் எக்காளத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை பூமியின் நான்கு திசைகளிலிருந்தும் வானத்தின் ஒருமுனை துவக்கி அதன் மறுமுனை வரைக்குமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்." ( மத்தேயு 24:31) இயேசு தாமே ஆண்டவராயில்லாவிட்டால் இப்படிச் சொல்ல முடியுமா?

உ) இயேசுவானவர் செய்வித்த அற்புதங்களை எவரும் சிந்தித்துப் பார்த்தால், அவர் அவற்றை தமது பெயராலும் தமது சொந்த அதிகாரத்தாலும் செய்தார் என்பதைக் காணமுடிகிறது. தீர்க்கதரிசிகள் பலர் அற்புதங்களைச் செய்தனர் என்பது உண்மையே. ஆயினும், அவற்றை தேவனுடைய பெயராலேயே செய்தனர். இயேசுவோ தம் விருப்பப்படியும் தம் சொந்த வல்லமையின் படியும் செயல்பட்டார். குணமடைய விரும்பி இயேசுவிடம் வந்த ஒரு தொழுநோயாளி உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்கும் ஆண்டவரே என்றான். இயேசு தம் கையை நீட்டி, அவனைத் தொட்டு, எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு



என்றார். உடனடியாக அந்நோய் நீங்கி அவன் சுகமானான் (மத்தேயு 8:2,3)

மேலும் கொந்தளித்த கடலை அவர் அமர்த்தினார். ஆண்டவருடைய நாமத்தில் உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அவர் சொல்லவில்லை. மாறாக தமது சொந்த அதிகாரத்தினாலே "இரையாதே, அமைதலாயிரு" என்று கட்டளையிட்டார். (மாற்கு 4:39). மேலும், விதவையின் மகனை இயேசு மீண்டும் உயிரோடெழுப்பினபோது அவர் கிட்டவந்து பாடையைத் தொட்டார், அப்பொழுது அதைச் சுமந்தவர்கள் நின்றனர். அவர், "வாலிபனே எழுந்திரு என்று உனக்குக் கட்டளை இடுகிறேன்" என்றார். அப்பொழுது மரித்தவன் உடனே எழுந்து உட்கார்ந்து பேச ஆரம்பித்தான். இயேசு அவனை மறுபடியும் அவன் தாயுடம் கொடுத்தார். லூக்கா 7:14,15.

இயேசு தொழு நோயாளிகளை சுகமாக்கினது, மரித்தோரை எழுப்பியதுடன் நில்லாமல் பாவங்களை மன்னிக்கவும் தமக்கு அதிகாரம் உண்டு என்பதையும் காண்பித்தார். சுவிசேஷகராகிய மாற்கு நமக்கு கூறுகிறார். இயேசு கப்பநகூமிலே பிரவேசித்தார். அவர் வீட்டில் இருக்கிறார் என்று ஜனங்கள் கேள்விப்பட்டு, உடனே வாசலுக்கு முன்னும் நிற்க இடம் போதாதபடிக்கு அநேகர் கூடி வந்தார்கள். அவர்களுக்கு வசனத்தைப் போதித்தார். அப்பொழுது நான்கு பேர் ஒரு திமிர்வாதகரனை சுமந்து கொண்டு அவரிடத்தில் வந்தார்கள். ஜனக்கூட்டத்தின் நிமித்தம் அவருக்கு சமீபமாய் சேரக்கூடாமல், அவர் இருந்த வீட்டில் மேற்கூரையைப் பிரித்துத் திறப்பாக்கி, திமிர்வாதக்காரன் கிடக்கிற படுக்கையை இறக்கினார்கள்.

இயேசு, அவர்கள் விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி, ''மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது'' என்றார். அங்கே உட்கார்ந்திருந்த வேத பாரகரில் சிலர் இவன் இப்படி தேவ தூஷணம் சொல்லுகிறதென்ன தேவன் ஒருவரேயன்றிப் பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார்? என்று தங்கள் இருதயங்களில் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்களுக்குள்ளே இப்படிச் சிந்திக்கிறார்களென்று, இயேசு உடனே தம்முடைய ஆவியிலே அறிந்து அவர்களை நோக்கி , நீங்கள் உங்கள் இருதயங்களில் இப்படிச் சிந்திக்கிறதென்ன?

உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று சொல்வதோ, எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்று சொல்வதோ எது எளிது? பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்று நீங்கள் அறிய வேண்டும் என்று சொல்லி திமிர்வாதக்காரனை நோக்கி. நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப்போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். உடனே அவன் எழுந்து தன் படுக்கையை எடுத்துக்கொண்டு எல்லாருக்கு முன்பாகப் போனான் (மாற்கு 2:1-13)

பாவியாகிய ஸ்திரீயின் கதையைப் பார்க்கும்போது பரிசேயனாகிய சீமோனின் வீட்டில் பாவங்களை மன்னிக்கத் தமக்கு இருக்கும் அதிகாரத்தின்படி அவளை மன்னித்ததில் இயேசுவின் நோக்கத்தை நாம் காண்கிறோம். தம்மை விருந்துக்கு அழைத்தவனை நோக்கி, இயேசு கூறினார். சீமோனே உனக்கு நான் ஒரு காரியம் சொல்லவேண்டும்... ஒருவனிடத்தில் இரண்டுபேர் கடன்பட்டிருந்தார்கள் ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும் மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும்



கொடுக்க வேண்டியதாய் இருந்தது. கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான். இப்படியிருக்க இவர்களில் எவன் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான். அதைச் சொல் என்றார். சீமோன் பிரதியுத்தரமாக; எவனுக்கு அதிகமாய் மன்னித்து விட்டானோ அவனே அதிக அன்பாயிருப்பான் என்று நினைக்கிறேன் என்றான். அதற்கு அவர் சரியாய் நிதானித்தாய் என்று சொல்லி, ஸ்திரீயினிடமாய்த் திரும்பி, சீமோனை நோக்கி, "இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயே, நான் உன் வீட்டில் பிரவேசித்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை, இவளோ கண்ணீரினால் என்பாதங்களை நனைத்து, தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள். நீ என்னை முத்தஞ் செய்யவில்லை. இவளோ நான் உட்பிரவேசித்தது முதல் என் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள். நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை. இவளோ என் பாதங்களில் பரிமள தைலம் பூசினாள். ஆதலால் நான் உனக்குச் சொல்லுகிறேன். இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது. இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே. எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்பு கூறுவான் எனறு சொல்லி, அவளை நோக்க உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார். அப்பொழுது கூடப்பந்தி இருந்தவர்கள் பாவங்களை மன்னிக்க இவர் யார் என்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள். அவர் ஸ்திரீயை நோக்கி, "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடேபோ" என்றார். (லூக்கா 7:36-50)

இந்தச் சம்பவத்தில் அந்த பாவியான ஸ்திரீ

மனந்திரும்பினபடியால் அல்ல, அவள் மிகுதியாய் அன்பு கூர்ந்தபடியால் இயேசு அவளுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்பதே இதன் பொருள். இயேசுவின் அன்பு தேவனுடைய அன்புக்குச் சமமானது என்பதை இது குறிப்பிடுகிறது.

இயேசு முதன் முதலாக தம்முடைய சீஷர்களை வெளியே ஊழியம் செய்யும்படி அனுப்பியபோது தம்முடைய நாமத்தினாலே அனுப்புகிறார். நோயுள்ளவர்களைச் சுகமாக்கவும் பிசாசுகளை துரத்தவும் அதிகாரம் கொடுத்தார். மத்தேயு 10:1-7; மாற்கு 3:15-19 மற்றும் லூக்கா 9:1-3 வாசித்துப் பார்க்கவும்.

3. பரமபிதாவிடம் தமக்குள்ள உறவு குறித்து விநோதமாய் அவர் தம்மைப்பற்றிப் பேசும்போது பேசினார். தேவனை அவரது ஜனங்களின் பிதா என்றும் தேவன் பிதா என்பது மனுக்குலத்துக்குப் பொருந்தும் என்றும் கூறுகிறார். இதனால் இதை அவர் புதிதாகச் சொன்னவரல்ல, ஏனெனில் பழைய ஏற்பாட்டிலும் தீர்க்கதரிசிகள் தேவன் தம்முடைய ஜனத்திற்கு, தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு பிதாவாயிருக்கிறார் என்று கூறியுள்ளனர்.

தேவரீர் எங்கள் பிதாவாயிருக்கிறீர் ; ஆபிரகாம் எங்களை அறியான், இஸ்ரவேலுக்கு நாங்கள் அறியப்படவில்லை. கர்த்தாவே நீர் எங்கள் பிதாவும் மீட்பருமாயிருக்கிறீர் (ஏசாயா 63:16) மோசே, ஓசியா, ஏசாயா மற்றும் இதர தீர்க்கதரிசிகள் கூறிய வார்த்தைகளில் இன்னும் ஏராளம் சான்றுகள் உண்டு. இருப்பினும் இயேசுவானவர் தமக்கு தேவன் பிதாவாக இருப்பது தனித்துவம் வாய்ந்தது என்று கூறுகிறார். அது மனிதருக்கு அவர் பிதாவாய் இருப்பதிலிருந்து வித்தியாசமானது. பலமுறை "என் பிதாவே" என்ற வார்த்தையை தேவனை அழைக்க அவர் பயன்படுத்துகிறார். கர்த்தருடைய ஜெபத்தில் மட்டும் எங்கள்



பிதாவே என்று ஒருமுறை அழைக்கிறார்.

மேலும் பிதாவுடன் இயேசுவுக்குள்ள உறவு குறித்த மிகத் தெளிவான அறிவிப்பு இயேசு தாமே பிதாவை நோக்கி, "பிதாவே, வானத்துக்கும், பூமிக்கும் ஆண்டவரே, இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து பாலகருக்கு வெளிப்படுத்தின படியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். ஆம் பிதாவே இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது. சகலமும் என் பிதாவினால் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான், குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான். வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் ; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் ; என் நுகத்தை ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். ( மத்தேயு 11;25-28) என்ற ஆச்சரியமான வார்த்தைகளில் காணக்கிடக்கின்றன.

இந்த மகிமையான அறிவிப்புகளில் நித்தியத்தின் சத்தம் எதிரொலிப்பதை நாம் கேட்கிறோம். இயேசு பிதாவைக் குறித்த அறிவை தம்மட்டுக்கும், குமாரனைப் பற்றிய அறிவை தேவன் மட்டுக்கும் கட்டுப்படுத்தி வைத்திருந்தது எப்படி என்று காணும்போது, இந்த அற்புதமான இரகசியத்தின் மேன்மையை உணருகிறோம். இந்தப் பரிமாற்ற உறவு சமத்துவத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

இயேசுவானவர் பிதாவானவருடன் தமக்குள்ள தனித்துவமிக்க உறவை யூதர்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்பிய வேறு நிகழ்வும் உண்டு. அவர் பரிசேயரைப் பார்த்து : கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர் யாருடைய குமாரன்? என்று கேட்டார். அவர் தாவீதின் குமாரன் என்றார்கள். அதற்கு அவர் அப்படியானால் தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறது எப்படி? நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்திலே உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று சொல்லியிருக்கிறாரே? தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவருக்கு கிறிஸ்துகுமாரனாயிருப்பது எப்படி? (மத்தேயு 22:41-45)

கடைசியாக, அவர் பிரதான ஆசாரியனாகிய காய்பாவின் முன் விசாரணைக்கு நிற்கையில் பிரதான ஆசாரியன், அவரை நோக்கி; நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன் பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான். அதற்கு இயேசு, "நீர் சொல்லுகிறபடி தான். அன்றியும், மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். (மத்தேயு 26:63,64)

இந்தப் பதிலில், தானியேல் மேசியாவைக் குறித்து உரைத்துள்ள தீர்க்கதரிசனத்தை அவர் சுட்டிக்காட்டுவதைக் காண்கிறோம். "இராத்தரிசனங்களிலே நான்



பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவன் வானத்து மேகங்களுடனே வந்தார். அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்களும், ஜாதிகளும், பாஷைக்காரரும், அவரையே சேவிக்கும்படி அவருக்குக் கர்த்தத்துவமும், மகிமையும், இராஜரிகமும் கொடுக்கப்பட்டது. அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்தத்துவம், அவருடைய இராஜ்யம் அழியாததுமாய் இருக்கிறது." (தானியேல் 7:13,14)

## செய்திகளின் சாராம்சம்

இந்தச் சத்தியங்களை ஆராய்ந்து பார்க்கும் போது, மனிதகுலத்தின் சரித்திரத்திலேயே ஒருபோதும் தோன்றாத ஒருவரை நாம் சந்திக்க நேரிடுகிறது. அவரைப் பற்றி நாம் கொண்டுள்ள கருத்தோவியம் நம்முடைய இருதயங்களைக் கவர்ந்திழுத்து, அவரை நாம் பணிந்திடும்படி ஊக்குவிக்கிறது. அவருடைய தெய்வீகமானது, அவர் வாழ்வின் எல்லா அம்சங்களுடனும் இணைந்திருக்கின்றது, அவருடைய கூற்றுகளுடன் தொடர்புடையதாயிருக்கிறது, அவருடைய செயல்கள், அற்புதங்கள், அவர் வாழ்வு, அவருடைய சிலுவை மரணம், அவருடைய உயிர்த்தெழுதல் மற்றும் அவருடைய பரமேறுதல் ஆகியவற்றுடனும் தொடர்புள்ளதாயிருக்கிறது என்று நாம் காண்கிறோம். புதிய ஏற்பாட்டின் மனிதர்கள் தம் வாலிபப் பருவமுதல் ஏக இறைக்கொள்கையின் பாலைச் சூப்பிக் குடித்தவர்கள் - அவருடைய தெய்வீகத்தை விசுவாசிக்கும்படிச் செய்தவைகள் இந்த உண்மைகளே. இந்தச் சத்தியங்களை நாம்

ஏற்றுக்கொள்வோமானால் எதிர்த்து வரும் எல்லா முரண்பாடுகளையும் சப்தமில்லாமல் சிக்கறுக்கமுடியும். ஆதி சபையானது இச் சரித்திரத்தை இட்டுக்கட்டியது என நாம் எண்ணும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறோம். இந்த நிகழ்வுகள் எளிய கலிலேயர் குழு ஒன்றின் கற்பனையிலிருந்து உதித்தவை என்றும் கருதும்படியாகிறது. ஆனால் எளிய, படிப்பறிவற்ற கலைஞர்கள் தங்கள் சொந்தக் கற்பனையில் இந்த அற்புதமான தெய்வீக ஆளத்துவத்தை உருவாக்கினர் என்று மனது என்னத்தை விசுவாசிக்க முடியும். அவர்கள் பலவீனர்களாக பாவத்தால் நெருக்கப்பட்டிருக்கையில் அவர் பாவமற்றவர் என்று கற்பனை செய்வதில் வெற்றியடைந்தனர். ஏக இறைக்கொள்கையின் இரத்தம் அவர்கள் சரீரத்தில் ஓடிய போதிலும் அவருடைய தெய்வீகத் தன்மையைக் கற்பனை செய்ய, அவர் தம்முடைய தெய்வீகத் தன்மையை அறிவித்த பல்வேறு வழிகளையும், முறைகளையும், பல்வேறு சூழ்நிலைகளையும் சந்தர்ப்பங்களையும் உருவாக்க, பலத்தோடு கூடிய பலவீனத்தை, அளவற்ற மகிமையுடன் தாழ்மையினை இணைத்து கற்பனை செய்ய ; அந்த எளிய மக்கள் இவையாவற்றையும் எண்ணி உருவேற்படுத்திய செயல் சாத்தியக் கூறுகளுக்கு அப்பாற்பட்டது.

கிறிஸ்தவத்தின் இரகசியம் இது தான், புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டதாக நாம் காணும் அதன் தீர்மானம் இதுதான். இந்தத் தீர்வை நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஏனெனில் அதற்கு நிகராக வேறெந்த தீர்வும் இல்லை. ஆகையால் நாமும் கூட விசுவாசிக்கிறோம். ஆகையால் நாங்கள் பேசுகிறோம்.

சி.ஜி. பிளாண்டர் அவர்கள் சத்தியத்தின் சமநிலை



என்னும் தமது நூலில் பேசுபவருடைய மனதில் ஒரு தோற்றத்தை வார்த்தை சுட்டிக்காட்டுகிறது. இங்கு தேவன் தாமே அந்த தோற்றமாயிருக்கிறார். தேவனிடத்திலிருந்து புறப்பட்ட வார்த்தையாக கிறிஸ்து இருப்பாரானால் அவர் தேவனுடைய பரிபூரண சித்தத்தின் வெளிப்பாடே அல்லாமல் வேறல்ல. வேறு வார்த்தைகளில் தேவனிடத்திலிருந்து ஒரு அடிக்குறிப்பு : தேவனுடைய வார்த்தை என்னும் பதவி கிறிஸ்துவுக்கு உரியது. முஹம்மது தன்னுடன் இணக்கமாயிருந்த கிறிஸ்தவர்களின் வாயிலிருந்து இப்பட்டத்தை எடுத்துக் கொண்டார் இந்த சொற்றொடர் முழுமையும் கிறிஸ்தவத்துக்குரியதாகும். வெளிக்காட்டுதல் ஆகும். பிற்பாடு தேவன் தமது பரிசுத்த ஆவியின் மூலம் அவர்களுடன் பேசினார்.

கிறிஸ்து ஒருவர் மட்டுமே தேவனை மனிதனுக்கு அறிவிக்கிறார் என்று தேவனுடைய வார்த்தை நமக்குக் காண்பிக்கிறது. ஏனெனில் அவர் தேவனை அறிந்திருக்கிறார். அவரது சித்தத்தைப் பூரணமாய் அறிவிக்கிறார். இயேசுவும் கூட இந்தச் சத்தியத்தை அறிவிக்கிறார் : பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான் ; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர வேறொருவனும் பிதாவை அறியான். வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் ; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத்தேயு 11:27,28)

இந்த விவாதத்தை முடிக்கையில் இறைத்தூதர்களின் ஸுராவின் 91ம் வசனத்தை உங்கள் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன். அவள் தான் தனது கற்பைக் காத்துக்

கொண்டவள் ; ஆகவே நமது ஆவியை அவளுக்குள் ஊதினோம், அவனையும் அவளுடைய மகனையும் எல்லா சிருஷ்டிகளுக்கும் அடையாளமாக ஏற்படுத்தினோம். அடையாளம் என்பது ஒருமையில் சொல்லப்பட்டுள்ளது. இரண்டு நபர்கள் குறிக்கப்பட்டுள்ளனர். இது ஏசாயா தீர்க்கதரிசனத்தில் நமது இரட்சகரைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளதை நமக்கு நினைவூட்டுகிறது : நமக்கு ஒரு பாலகன் பிறந்தார் ; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேல் இருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்தியப்பிதா, சமாதானப்பிரபு (ஏசாயா 9:6)

பைதாவி தன்னுடைய தரமற்ற வியாக்கியானம் மூலமாக எல்லா சிருஷ்டிகளுக்கும் ஓர் அடையாளம்; ஏனெனில் எவர் தங்கள் பங்குவீதத்தில் பிரதிபலிக்கிறார்களோ, அவர் சிருஷ்டிகருடைய வல்லமையைக் குறித்த நிச்சயத்தைப் பெற்றுக்கொள்கின்றனர் (அவருடைய நாமம் உயர்த்தப்படுவதாக) என்று கூறி அவ்வார்த்தைகளின் முக்கியத்துவத்தை குறைக்க முயற்சித்தார்.

## கிறிஸ்துவின் வாழ்க்கை அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதல்

கிறிஸ்துவின் வாழ்க்கை குறித்த குர்ஆன் குறிப்புகளை விவாதிக்கும்போது மூன்று சிரமங்களை நாம் சந்திக்கிறோம். முதலாவது குர்ஆனின் சிதறல்கள் (இணைப்பற்ற தன்மை) அதிலுள்ள சம்பவங்கள் வரிசைக்கிரமமாக இல்லை. நிகழ்வுக்காலங்கள், நிகழ்வுகள் தம்மில் தொடர்பின்றி உள்ளன, சீரான முன்னேற்றமில்லை. அதின் வசனங்கள் வெவ்வேறு நேரங்களில் வெவ்வேறு இடங்களில்



இறங்கினதால் (முஸ்லிம்கள் சொல்கிறபடி) இப்படி ஆயிற்று. ஒரு வாசகர் ஒரு தலைப்பைத் தொடர்ந்து ஆரம்ப முதல் முடிவு வரை படிக்க முயலும் போது அவருக்கு உண்டாகும் குழப்பத்துடன் இதுவும் சேர்ந்து கொள்கிறது. இப்படியாக பிரமாணங்கள் கதைகளுடனும், நிகழ்வுகளுடனும், வாக்குறுதிகள் எச்சரிக்கைகளுடன் கலந்து போயுள்ளன.

இரண்டாவது விஷயம் இன்னும் சிக்கலானது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து குறித்து குர்ஆனிலுள்ள தகவல்கள் முரண்பாட்டிற்கு அப்பாற்பட்டவையல்ல. சில வசனங்கள் அவரை வெறும் மனிதனாகவும் தீர்க்கதரிசியாகவும் குறிப்பிடுகின்றன, வேறு சில வசனங்கள் வேறெந்த ஒரு சிருஷ்டிக்கும் வழங்கப்பட முடியாத பட்டப்பெயர்களால் அவரை அழைக்கின்றன. மிக மோசமான ஒரு முரண்பாடு அவருடைய மரணம் பற்றியது. ஏனெனில் புலன் உணர்வுகளை மீறித்தான் அவ்வசனங்களை நாம் படிக்க முடியும்.

மூன்றாவது, ஸூராக்களின் காலவரிசை பிரச்சனை, கிறிஸ்துவைக் குறித்த முஹம்மதுவின் சிந்தையின் ஆரம்பம் மற்றும் அதன் வளர்ச்சியை நாம் பின்பற்றுவோம் என்றால், முதலாவது குறிப்புப் பதிவிலிருந்து துவங்க வேண்டும், பின்பு மெதுவாகவும், காலவரிசைப்படியும் கடைசி ஸூரா (வசனம்) சென்றடையும் வரை நாம் முன்னேற வேண்டும். ஆனால் குர்ஆனின் வசனங்களுடைய (ஸூராக்கள்) சரித்திரபூர்வமான வரிசைக் கிரமம் குறித்து இஸ்லாமிய அறிஞர்களிடையே கருத்தொற்றுமை இல்லை என்பது துக்ககரமான விஷயம். குர்ஆனின் தற்போதைய வசன வரிசை காலக்கிரமப் படியானதல்ல என்று அவர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

## பவுல் என்ன சொன்னார்?

கிறிஸ்தவத்தில் குறிப்பிடப்படும் பாவம் குறித்து, கிறிஸ்தவத்தை வண்ணமயமாக்கிய அஞ்ஞான மார்க்கத்தின் ஒரு எதிரொலி தவிர வேறொன்றுமில்லை என்று நீங்கள் கூறியது குறித்து பவுல் தம்மிடமிருந்து எல்லாரும் ஏதாவது ஒன்றை கற்றுக்கொள்ளத்தக்கதாக யூதர்களுக்கு ஒரு யூதனாகவும், அஞ்ஞானிகளுக்கு ஒரு அஞ்ஞானியாகவும்... என்னை ஆக்கிக்கொள்கிறேன் என்று கூறுகிறார்.

தாம் குணப்படுவதற்குமுன், பவுல் தீவிரமான ஒரு யூதனாக இருந்தார். அப்பொழுது அவருடைய பெயர் சவுல், மோசேயின் பிரமாணங்கள் குறித்த தமதுவைராக்கியம் நிமித்தமாக புகழ்பெற்றவர். கீழ்வரும் வார்த்தைகளால் தம்மைக்குறித்து பவுல் விவரிக்கிறார்.

"மாம்சத்தின் மீது நம்பிக்கை வைக்க நினைத்தால், நான் அதிகமாய் அப்படிச் செய்யலாம். நான் எட்டாம் நாளில் விருத்தசேதனமடைந்தவன்; இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான்; எபிரெயரில் பிறந்த எபிரெயன்; நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்; பக்தி வைராக் கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன்; நியாயப் பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன், ஆகிலும் எனக்கு லாபமாயிருந்தவைகள் எவைகளோ, அவைகளை கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அது மாத்திரமல்ல என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லா வற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். நான்



கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும்.. எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன் குப்பையுமாக எண்ணுகிறேன். பிலிப்பியர் 3:4-8,10)

பவுலின் தகப்பன் ஒரு பரிசேயன் எனவும், பவுல் நியாயப்பிரமாணத்தின் தீவிர ஒழுக்கத்தின்படி வளர்க்கப்பட்டார் எனவும் வரலாற்றிஞர்கள் நமக்குத் தெரிவிக்கின்றனர். தர்சு பட்டணத்திலே பவுலின் படிப்பு முடிந்தபோது, யூதப் பிரமாணத்தையும், மத அறிவையும் கற்றுக்கொள்ளும்படி ஒரு இளைஞனாக எருசலேமுக்கு அனுப்பப்பட்டார். அங்குஅவருடைய மதபோதகர் புகழ்பெற்ற கமாலியேல் ஆவார். அவருடைய காலடியில் அமர்ந்து கற்றுக்கொண்டார். இயேசு கிறிஸ்து தம்மைப் பவுலுக்கு வெளிப்படுத்து முன் கிறிஸ்தவர்களைத் தீவிரமாகத் துன்புறுத்தி வந்தார். அவரை இன்னும் அதிகம் கோபப்படவைத்தது இரத்த சாட்சியாகிய ஸ்தேவான் தாம் கல்லெறியப்படு முன்பு சொன்ன வார்த்தைகளே, "இந்த நசரேயனாகிய இயேசு இந்த ஸ்தலத்தை அழித்துப்போட்டு, மோசே நமக்குக் கையளித்த முறைமைகளை மாற்றிப் போடுவார்". தனக்கிருந்த வைராக்கியத்தினிமித்தம் தமஸ்கு விலிருந்த கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தும் படியான அதிகாரத்தை யூத அதிகாரிகளிடமிருந்து பெற்றிருந்தார். ஆனால் அப்பட்டணத்திற்கு அருகில் சென்றபோது, வழியிலேயே இயேசு கிறிஸ்து அவருக்குக் காட்சியளித்துப் பேசினபோது, அவரை இவர் விசுவாசித்தார். அகிரிப்பா இராஜாவின் முன்பு பின்னாளில் தாம் குணப்பட்ட சூழ்நிலைகளைப் பின்வரும் வார்த்தைகளால் விவரிக்கிறார். "இந்தப் பிரயாணங்கள் ஒன்றின்போது நான் பிரதான

ஆசாரியர்களிடத்தில் அதிகாரமும் உத்தரவும் பெற்று தமஸ்குவுக்குப் போகும் போது, மத்தியான வேளையில் இராஜாவே! நான் சூரியனுடைய பிரகாசத்திலும் அதிகமான ஒளி வானத்திலிருந்து என்னையும், என்னுடனே கூடப் பிரயாணம் பண்ணினவர்களையும் சுற்றிப் பிரகாசிக்கக் கண்டேன். நாங்களெல்லாரும் தரையிலே விழுந்தபோது, சவுலே, சவுலே, நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்? முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்று எபிரெயு பாஷையிலே என்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டேன். அப்பொழுது நான் ஆண்டவனே? நீர் யார்? என்றேன் அதற்கு அவர் நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே இப்பொழுது நீ எழுந்து காலூன்றி நில், நீ கண்டவை களையும், நான் உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப் போகிறவைகளையும் குறித்து உன்னை ஊழியக்கார னாகவும், சாட்சியாகவும் ஏற்படுத்துகிறதற்காக உனக்குத் தரிசனமானேன். உன் சுய ஜனத்தாரிடத்தினின்றும், அந்நிய ஜனத்தாரிடத்தினின்றும் உன்னை விடுதலையாக்கி, அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும், பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும் சாத்தானுடைய அதிகாரத்தை விட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படி இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார். (அப்போஸ்தலர் 26:12-18)

யூதருக்கு ஒரு யூதனாகவும் என்ற அப்போஸ்தலப் பெருமகனின் கூற்று குறித்து, நீங்கள் அதை மெய்யான



விதத்தில் புரிந்து கொள்ளாமல் தவறாக அர்த்தப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள் அல்லது வசனத்தை அதன் இட அமைவிற்கு வெளியே எடுத்து குழப்ப எண்ணியிருக்கிறிர்கள் போலிருக்கிறது.

நாம் ஏற்கனவே கூறியுள்ளோம் ; அப்போஸ் தலனைாகிய பவுல் ரபீ கமாலியேலின் பாதத்தில் மார்க்க ஆசாரப்படி வளர்க்கப்பட்டார் ; அந்த புகழ்பெற்ற பள்ளியில் யூதப்பிரமாணங்களையும், சடங்குகளையும் மனசாட்சியின் கூற்றுகளுக்கு முரண்பாடாத வகையில் கற்றுத்தேர்ந்தார். இயேசு தாம் எதிர்பார்க்கப்பட்ட மேசியா என்பதை யூதர்களுக்கு நிச்சயப்படுத்திக் காண்பிக்க தேவை யில்லாமல் அவைகளில் தலையிட விரும்பவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, கிறிஸ்தவம் நியாயப்பிர மாணத்தை அழிக்கும்படி அல்ல, அதை நிறைவேற்றவே வந்தது என்பதை செயல்படுத்திக் காண்பிப்பது அவருக்கு அவசியமாயிருந்தது.

நாம் பார்த்தபடி அவர் பிறப்பால் எபிரெயர், இந்தச் சுதந்தரமில்லாமல் யூதர்களைக் கவருவதோ அவர்களுடைய ஜெபாலயங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அனுமதி பெறவோ முடியாது.

புறஜாதிகளைப் பொறுத்தவரை, முதல் கிறிஸ்தவ சபைகள், குறிப்பாக யூதேயாவிலுள்ளவைகள் கட்டளைகளின் பிரகாரம் அவைகளில் சில மோசேயின் பிரமாணத்திலிருந்து வந்தவை, மற்றவை அடுத்தடுத்த தலைமுறைகளில் போதகர்களாலும் குருக்களாலும் எண்ணற்ற வழக்கங்கள், அவற்றில் முக்கியமானது விருத்தசேதனம், இது எப்போதும் ஒரு கடினமான

தடையாகவே காணப்பட்டு வந்தது என்று அப்போஸ்தல நடபடிகள் நமகுத் தெரிவிக்கிறது. ஒரு ரபி இவ்வாறு சொல்கிறார். இந்த விருத்தசேதனம் கற்பனை இல்லாமல் பூமியும் ஆகாயமும் சிருஷ்டிக்கப்பட்டிருக்க முடியாது. இன்னொருவர் சொல்லுகிறார். நியாயப்பிரமாணம் முழுவதையும் இது ஈடு செய்கிறது. எவ்வாறிருப்பினும் பவுலும் பர்னபாவும் இரு ஆண்டுகள் ஊழியம் செய்த அந்தியோகியா சபையில் சுவிசேஷத்தின் செய்தியை ஏற்றுக்கொண்ட புறஜாதிகளை ஏற்றுக்கொள்ள கிறிஸ்தவ விசுவாசக் கதவு திறந்து வைக்கப்பட்டிருந்தது. எருசலேம் சபையிலோ யூத வழி சகோதரர்கள் இந்தச் செய்தியைக் கேட்டபோது அசௌகரியமடைந்தனர். இந்த அசௌகரியம் கடுமையான வாக்குவாதங்களுக்கு வழி வகுத்தது.

எருசலேம் சபை இவ்விஷயம் குறித்து விவாதிக்க ஒரு ஆலோசனைச் சங்கத்தைக் கூட்டியது. சீப்புருதீவிலிருந்து சிறிய ஆசியா வரை தாங்கள் மேற்கொண்ட நற்செய்திப் பயணத்தின்போது தேவன் செய்த அதிசயமான கிரியைகளை பவுலும் பர்னபாவும் அதில் விவரித்தனர். ஆயிரக் கணக்கான புறஜாதிகள் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டனர் என்னும் நற்செய்தியைக் கேள்வியுற்றபின்பு பேதுரு அப்போஸ்தலன் எழுந்து புறஜாதிகள் தேவனை விசுவாசிக்கும்படி அவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க தேவன் தம்மைத் தெரிந்து கொண்டார் என்பதை அங்கு கூடியிருந்தவர்களுக்கு நினைவூட்டினார்.

முடிவாக, ஆலோசனைச் சங்கத் தலைவரான யாக்கோபு அப்போஸ்தலன் எழுந்து விவாதிக்கப்பட்ட



விஷயங்களின் தீர்மானத்தை நான்கு விஷயங்களாக முன் வைத்தார். அவை; புறஜாதியாரிலிருந்து கிறிஸ்தவர் களானவர்கள் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவு, இரத்தம், நெருக்கப்பட்டு இறந்த மிருகங்களின் இறைச்சி மற்றும் வேசித்தனம் ஆகியவற்றுக்கு விலகி இருக்க வேண்டும் என்பதே.

பவுல் புற ஜாதிகளிடம் யூத முரட்டுத்தனத்துக்கு மாறாக சாந்தத்துடனும் தாழ்மையுடனும் இடைபட்டு, அவர்களுக்குள் விசுவாசிகளானவர்களிடம் கிறிஸ்துவின் அன்பை செயல்படுத்திக் காண்பித்தார் என சபைச் சரித்திர ஆசிரியர்கள் நமக்குக் கூறுகின்றனர். அவர்களில் சிலரைத் தமது நற்செய்திப் பயணத்தில் பங்குபெறச் செய்து, வேறு சிலரை சபைகளில் மேய்ப்பர்களாக ஏற்படுத்தினார். அவருடைய வார்த்தைகளை நாம் இப்படித்தான் புரிந்து கொள்கிறோம். நியாயப்பிரமாணம் இல்லாதவர்களுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப் போலுமானேன். (நான் தேவனுடைய பிரமாணத்திற்கு நீங்கலானவனா யிராமல் கிறிஸ்துவின் பிரமாணத்துக்கு உள்ளானவனா யிருக்கிறேன்). (1 கொரி 9:21,22)

## முடிவுரை

உங்கள் கடிதத்தின் இரண்டாவது பக்கத்தில் இந்தக் கடிதம் சரியான பாதையை விரும்புபவர்களுக்கானது எனக் கூறுகிறீர்கள். ஆனால், மற்ற பக்கங்களிலோ புரிந்து கொள்ளுதலுக்கான ஓர் அழைப்பு என்பதைவிட சாபங்கள் எனத் தோன்றும் படியாகத் தாக்கி எழுதியுள்ளீர்கள். நாங்களும் அதுபோலவே அல்லது இன்னும் மோசமான

முறையில் பதில் தந்திருக்க முடியும். ஏனெனில், இஸ்லாத்தில் பல குறைபாடுகள் உள்ளன. ஆனால் நாங்கள் அப்படிச் செய்யவில்லை. ஏனெனில் கிறிஸ்துவின் ஆவி எங்கள் எண்ணங்களையும் அதன் விளைவாக எங்கள் எழுதுகோல்களையும் சுத்திகரித்து விட்டது. உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் ; உங்களை துன்பப்படுத்து கிறவர்களுக்காக ஜெபியுங்கள் என்று கிறிஸ்து கட்டளை கொடுத்துள்ளார் ( மத்தேயு 5;44) உண்மையில், நாங்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளும் தேவன், நீங்கள் சத்தியத்தை அறிந்துகொள்ள அகப்பார்வை தந்து அதன் மூலம் குறுகிய மனப்பான்மையின் அல்லது கண்மூடித்தனமான நம்பிக்கையின் ஆவியிலிருந்து விடுதலைபெற உதவி செய்யும்படி ஜெபிக்கிறோம்.

## திறனாய்வுக் கேள்விகள்

எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்

**அன்புள்ளவாசகரே,**

இந்தப் புத்தகத்தின் தலைப்பு மூலம் குறிப்பிடப்பட்ட இந்நூலாசிரியரின் செய்தி ஆராய்ந்து பார்த்து சோதித்து அறிவதற்கான ஓர் அழைப்பாகும். இந்நூலைக் கவனமாக வாசித்து முடித்த பின்பு உங்கள் அறிவாற்றலைச் சோதித்துப் பார்க்க முயற்சி செய்யுங்கள். பின்வரும் கேள்விகளை அதற்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். 20 கேள்விகளுக்குச் சரியாக நீங்கள் பதிலளித்தால் உங்களுக்கு ஒரு புத்தகம் **பரிசாக அனுப்புவோம்.**



## கேள்விகள்

1. விசாரிக்கவும் ஆராயவும் சரியான கருவி எது?
2. 1 கொரிந்தியர் 1;22-24 ன் முக்கியமான கருத்து எது?
3. எந்த நோக்கத்திற்காக, யாருக்காக கிறிஸ்து மரித்தார்?
4. கிறிஸ்துவுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகள் அவரைப் பற்றி கொடுத்த சாட்சிகளின் சாராம்சம் என்ன?
5. கிறிஸ்து தாம் சிலுவையிலறையப்பட்டு மரிக்கப்போவதாக அறிவித்தாரா? ஒரு எடுத்துக்காட்டு தருக.
6. கிறிஸ்துவின் உயிர்த் தெழுதலுக்குப் பின் நிகழ்ந்த சில நிகழ்வுகளைக் குறிப்பிடுக.
7. கிறிஸ்து மார்க்கம் தோன்றியது முதல் அதன் குறிக்கோள் அல்லது நோக்கம் என்ன?
8. கிறிஸ்துவின் மரணம் அல்லது அவர் கொலை செய்யப்படுதல் பற்றிக் குறிப்பிடும் ஒரு குர்ஆன் வசனம் கூறுக.
9. ( ஓ இயேசுவே, இதோ நாம் உம்மைச் சேர்த்துக் கொள்ளுகிறோம்) என்ற இம்ரானின் வீடு வசனம் 55க்கு அல் ரஸி தரும் விளக்கத்தைச் சுருக்கமாகத் தருக.
10. உங்கள் கருத்துப்படி கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்தில் மிக முக்கியமான வசனம் எது?
11. மதங்களில் யுத்தங்களையும் சண்டைகளையும்

தூண்டிவிடுகிறது அல்லது மக்களை சமாதானத்துக்கும் அன்புக்கும் அழைக்கும் மதம் எது?

12. ஒரு மதத்தை அதைப்பின்பற்றுகிறவர்களின் நடக்கையைக் கொண்டா அல்லது அதன் கட்டளைகளை அல்லது நியாயத்தீர்ப்புகளைக் கொண்டா, எதைக் கொண்டு மதிப்பிடுவது சரி?

13. உங்கள் கருத்துப்படி ஆதி இஸ்லாமிய தாக்குதல்கள் ஒரு ஏதுவா அல்லது முடிவா?

14. பாவத்தை நீங்கள் எப்படி வரையறுப்பீர்கள்?

15. ரோமர் 5:18,19,20 வசனங்களை விவரியுங்கள்

16. பாவத்தின் சம்பளங்கள் என்ன?

17. பாவத்தினால் வந்த மரணத்திலிருந்து நாம் தப்புவது எப்படி?

18. கிறிஸ்தவம் மக்களை நீதி, தன்மை, உத்தமம் மற்றும் பரிசுத்தத்தைத் நாடச்செய்கிறதா அல்லது அஞ்ஞானம் மற்றும் விக்கிரக ஆராதனை ஆகியவற்றை நாடச் செய்கிறதா?

19. இரண்டு அர்த்தமுள்ள வாக்கியங்களில் கிறிஸ்துவின் வாழக்கையை சுருக்கிக் கூறுக.

20. அவிசுவாசம் மற்றும் பலதெய்வ வணக்கம் ஆகியவற்றினின்று கிறிஸ்தவத்தை நாம் எப்படிப் பாதுகாப்பது?

21. பரிசுத்த ஆவியானவர் குறித்து குர்ஆன் மற்றும் சுவிசேஷம் போதிப்பவற்றுக்கு இடையேயுள்ள வித்தியாசம் என்ன?



22. தேவனோடு தொடர்புள்ள கிறிஸ்துவின் தெய்வீக குமாரத்துவத்துக்கு உதாரணம் தருக.

23. பவுலின் வாழ்க்கை குறித்தும், குணப்படுதல் குறித்தும் பிரசங்கம் குறித்தும் நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?